'நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்' (யோசு 24:15)

# நற்செய்திப் பணியாளர்

(சிவகங்கை மறைமாவட்ட தன்னார்வ நற்செய்திப் பணியாளர்களின் மாதச் செய்தி மடல்)

அருள் :XV  நவம்பர் கி.பி. 2024  சான்று : 179



## விண்ணகமே நம் தாய்நாடு



ஆண்டுத் தியானம் - அருள்சான்று நிலையம்







வட்டாரத் தியானக் கூட்டம்
காளையார்கோவில்



வட்டாரத் தியானக் கூட்டம்
இடைக்காட்டூர்



வட்டாரத் தியானக் கூட்டம்
செக்காலை



புதிய பணியாளர்கள் பயிற்சி
பரமக்குடி



வட்டாரத் தியானக் கூட்டம்
பரமக்குடி

# உங்கள் சகோதரனிடமிருந்து

பாசத்திற்குரிய நற்செய்தி பணி குடும்பமே,

என் வார்த்தைகளை நீங்கள் தொடர்ந்து கடைபிடித்து வந்தால் உண்மையில் என் சீடர்களாய் இருப்பீர்கள் (யோவா 8:31) என்று நம் ஆண்டவர் கூறியிருப்பதை உணர்ந்து நானும், நீங்களும் வாழ வாழ்த்துகிறேன், செபிக்கிறேன். நல்லதொரு "அக ஆய்வை" நம் பணி குடும்பம் நடத்தி முடித்திருக்கிறது. அதில் ஓரளவு நம்மை பற்றி அறிய வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அதன் அடிப்படையில் வளர்க்க வேண்டிய பண்பு நலன்கள், தவிர்க்க வேண்டிய குறைபாடுகள் ஆகியவற்றை ஓரளவு உணர்ந்து இருக்கிறோம் என்று நம்புகிறேன். தொடர்ந்து பணிக்குடும்ப வளர்ச்சிக்காக செபிப்போம்.

உண்மைச் சீடனுக்குரிய அடையாளங்களை சிந்தித்து வருகிறோம். இன்னொரு மொழிபெயர்ப்பில் (யோவா 8:31) "நீங்கள் என் போதனையில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீடர்களாய் இருப்பீர்கள்" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. நமது ஆங்கில மொழிபெயர்ப்பில் "If you continue in my word, you are truly my disciples" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. தொடர்ந்து கடைபிடித்தல் என்பது அவரது வார்த்தையில் நிலைத்திருப்பது தானே. இது உண்மைச் சீடனுக்குரிய பண்புகளில் ஒன்றாகும்.

படித்ததில் என் நினைவுக்கு வந்த ஒரு நிகழ்வு. ஒருவர் ஒரு பேருந்தில் பயணம் செய்த போது அந்த வண்டியில் ஒரு முதலுதவி பெட்டி இருந்ததைக் கண்டார். பேருந்து நடத்துநர் அதை திறந்த போது அதற்குள் மருந்துகள் பிளாஸ்ட்டர், பஞ்சு போன்றவை இருக்கும் என்று எதிர்பார்த்த பயணி அதிர்ச்சி அடைந்தார். அந்த முதலுதவி பெட்டிக்குள் மது பாட்டில்களும் இன்னும் போதைப் பொருள்களும் தான் இருந்தன.

இயேசு கிறிஸ்து ஆண்டவர் தன் சீடர்களை நண்பர்கள் என்று அழைக்கின்றார். "நான் கட்டளையிடுவதை எல்லாம் நீங்கள் செய்தால், நீங்கள் என் நண்பர்களாய் இருப்பீர்கள்" (யோவா 15:14) என்று நம் ஆண்டவர் கூறியிருக்கிறார்.

அக ஆய்வில் பல்வேறு குறைபாடுகள் வெளிப்பட்டன. அனைத்திற்கும் காரணம் கடவுளுக்கும் நமக்கும் இடையில் தினசரி இறை வார்த்தை தியான வாழ்வு, தனி செப அனுபவம் இருக்கவில்லை என்பதைத்தான் காட்டுகிறது. நம் பணிகளில் (வழிபாடு நடத்துவதில், இறைச்செய்தி கொடுப்பதில், பல்வேறு தாலந்துகளில்) எவ்வித குறையும் இல்லை. ஆனால் இறை ஒன்றிப்பில், இறை உறவில் குறைவு பட்டிருக்கிறோம் என்ற கசப்பான உண்மையை உணர்ந்தே ஆக வேண்டும். இது காலத்தின் கட்டாயம் இறை உறவில்லாமல் எதைச் செய்தாலும் அதனால் எந்த ஒரு பலனும் இல்லை.

ஒரு உண்மைச் சீடன் உறுதியான உள்ளமைக்கப்பட்ட இறைவார்த்தை தியான வாழ்வை கொண்டிருப்பது கட்டாயமாகும். இது ஒரே நாளில் நடக்கும் மேஜிக் வேலையல்ல. இது ஒரு தொடர் நிகழ்ச்சியாகும் எப்படி இந்த உடலுக்கு தொடர்ந்து உணவு கொடுக்காமல் விட்டால் இறப்பு நடக்குமோ அதேபோல தொடர் இறைவார்த்தை தியான வாழ்வு இல்லை என்றால் ஆவிக்குரிய இறப்பு நடக்கும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை. நம்மிலே பலர் ஞாயிறு திருப்பலி, சிறிது நேரம் இறைவார்த்தை வாசிப்பு இதிலேயே திருப்தி கண்டு விடுகிறோம்.

நம்முடைய இறைவார்த்தை தியானம் எப்படி இருக்க வேண்டும் என்பதை பற்றி பலமுறை செய்திகளில் பகிர்ந்து இருக்கிறேன். மீண்டும் இன்னும் ஆழமாக நினைவூட்ட விரும்புகின்றேன். முதலில் கடவுளை சந்திக்க அர்ப்பணிக்கப்பட்ட கவனம் சிதறாத ஒரு இடத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும். பல வருடங்களாக ஒவ்வொருவரும் 'மிஸ்பா' எனப்படும் தனி செப அறையை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தி வந்திருக்கிறேன். நம்மில் பலர் அதை

நடைமுறைப்படுத்தி வருகிறோம் என்று நம்புகிறேன். அலைபேசி, தொலைபேசி செயல்பாடுகளை நிறுத்தி வைத்தல், தனித்திருத்தல் போன்றவற்றை உறுதி செய்ய வேண்டும். நாம் செப அறையில் இருக்கும் போது நம் பிள்ளைகள் புரிந்து கொள்வார்கள். கடவுளும் நாமும் இருக்கும்போது அலைபேசியை மௌனமாக்கி விட வேண்டும். சிலர் செப நேரத்தில் அலைபேசியை எடுத்து "செபம் செய்கிறேன், பைபிள் வாசிக்கிறேன்". என்று பேசுகிறார்கள். நமக்கும் கடவுளுக்கும் இடையில் யாரும், எதுவும் வரக்கூடாது.

இரண்டாவது, அவரோடு ஒன்றித்திருப்பதற்கு, நெருக்கமாக இருப்பதற்கு, உறவோடு இருப்பதற்கு அதிக நேரம் எடுக்கும். அதற்கு பயிற்சியும், முயற்சியும் தேவை. உலகை பொறுத்தவரை இருவர் பழகுவதற்கு காலமும் பயிற்சியும் தேவையாய் இருக்கிறது. தரமான நேரம் ஒதுக்க வேண்டும். உரையாடல் இருபக்கச் சார்பாக இருக்க வேண்டும். ஒருவர் பேசுவதை மற்றவர் கேட்க வேண்டும். உறவு முறையில் நேரம் செலவிடாவிட்டால் உறவுகள் தளர்ந்து போய், உறவு வெகு தூரம் ஆகிவிடும் . நேரம் நேரம் செலவிடுவது செடிக்கு தண்ணீர் ஊற்றுவது போல. ஒரு செடி நன்றாக வளர வேண்டுமானால் தண்ணீர் அவசியம். நம் ஆண்டவரோடு உறவை நெருக்கமாக கட்டி எழுப்ப தரமான நேரத்தை ஒதுக்க வேண்டும்.

ஏற்கனவே நம் பணிக் குடும்பத்தில் ஒரு அட்டை அடித்துக் கொடுத்தோம். "நான் (காலை, மாலை) _ மணியிலிருந்து _ மணி வரை இறைவார்த்தை வாசித்து, தியானிப்பேன் என்று உறுதி கூறுகிறேன்" இதில் பணியாளர்கள் தங்கள் வசதிக்கேற்ப நேரத்தை குறித்து தியானித்து வந்தார்கள். அதற்கான வழிமுறை அட்டையையும் (ஒரு ஆண்டுக்குள் திருவிவிலியம் வாசித்தல்) கொடுத்திருந்தோம். அப்படி நாமே திட்டமிட்டு ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்க வேண்டும். சாற்றை பிழிந்து விட்டு சக்கையை கடவுளுக்கு கொடுக்க கூடாது. நமது சிறந்த நேரத்தை இறைவார்த்தை தியானத்திற்கு ஒதுக்க வேண்டும். அப்படி ஒதுக்கி விட்டால் அதில் சரியாக நிலைத்து நிற்க வேண்டும்.

இன்றைய உளவியல் புதிய பழக்கத்தை கற்றுக் கொள்வதற்கு 21 நாட்கள் போதுமானது என்று சொல்லுகிறது. எந்த ஒரு பழக்கத்தை உங்களுடையதாக விரும்புகிறீர்களோ அதை தொடர்ந்து 21 நாட்களுக்கு விடாமல் செய்தீர்கள் என்றால் அது உங்களுக்கு பழக்கமாகிவிடும். இது எளிது அல்ல. ஆனால் உறுதியான மனமும் தெளிவான சிந்தனையும் இருந்தால் நிச்சயம் நம்மில் புதிய பழக்கங்களை கற்றுக் கொள்ள முடியும் (நன்றி -சின்ன சின்ன சிந்தனைகள்). எனவே 21 நாட்கள் தொடர்ந்து இறைவார்த்தை தியானம் செய்தால், அது நமது பழக்க வழக்கமாகிவிடும். சிலர் ஆரம்பத்திலேயே ஒரு மணி நேரம், இரண்டு மணி நேரம் நான் திருவிவிலியம் வாசிப்பேன் என்று திட்டமிட்டு, அதை கைவிடுவதை நான் பார்த்திருக்கிறேன். ஒரு நாளைக்கு ஏழிலிருந்து பத்து நிமிடங்கள் என்று நிர்ணயித்து அதை தரமாக செலவிடலாம். அதை ஏற்கனவே சொன்னது போல 21 நாட்கள் தொடர்ந்து செய்ய வேண்டும். இதற்கென்று ஒதுக்கப்பட்ட நேரம், நாள், இவைகள் முழுவதும் உங்களை கடவுளிடம் திருப்பும். 24 மணி நேரமும் கடவுளோடு நடப்பது, இருப்பது என்பதே நமது இலக்கு. இதைத் தொடர்ந்து செய்யும்போது இறைவார்த்தை தேடலும் அதிகரிக்கும். அப்போது பத்து நிமிடங்கள் போதாது. அந்த தியான நேரம் இயல்பாகவே தானாகவே நீடித்து விடும்.

எனவே தொடங்கும் போது குறைவான நேரத்தை நிர்ணயித்து, அதை விடாமல் தொடர்ந்து செய்துவர, இயல்பாகவே நேரம் நீடித்து விடும். திருவிவிலியம் அறியாதவன், உண்மைச் சீடனாக இருக்க முடியாது. நாம் திரு விவிலியத்தை ஒழுங்கோடு நூல் நூலாக, அதிகாரம் அதிகாரமாக, இறைச்சொற்றொடர் சொற்றொடராக, தொடர்ச்சியாக, தினசரி வாசிப்பது நல்லது. முறையாக வாசிப்பது நல்லது. எனவே இதுவரை திட்டமிடாதவர்கள் முறையாகத் திட்டமிட்டு வாசிப்போம்.

உறவிலும் பணியிலும் உங்களோடு பயணிக்கும்

உங்கள் சகோதரன்

நற்பணி அ. சகாயராஜா

## அக்டோபர் 2024 — புதிய பணியாளர்கள் பயிற்சி

- சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி -I தங்கச்சிமடம், புனித குழந்தை தெரசாள் கோவிலில் 12.10.2024 அன்று நடைபெற்றது. 5 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி J.மேரிபுஷ்பம், நற்பணி X. லூர்துமேரி, நற்பணி J. ரெபேக்கா ஜோசப் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி -II காளையார்கோவில், தந்தை ஜோசப் சேவியர் அரங்கில் 12.10.2024 அன்று நடைபெற்றது. 5 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி K. ஜஸ்மின் கபிரியேல், நற்பணி S. சகாயலூயி ஆரோக்கியசாமி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி -III பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் 13.10.2024 அன்று நடைபெற்றது. 6 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி GMS. ராணி, நற்பணி K. ஜஸ்மின் கபிரியேல், செயலர் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி -IV இராமநாதபுரம், புனித செபமாலை அன்னை கோவிலில் 13.10.2024 அன்று நடைபெற்றது. 5 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி J. மேரிபுஷ்பம், நற்பணி G. ஜெனிபர், நற்பணி பெ. தெரசா மிரண்டா ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - V சிவகங்கை, வியான்னி அருள்பணி மையத்தில் 13.10.2024 அன்று நடைபெற்றது. 2 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி M. சகாயமேரி, நற்பணி D. மரிய ஜீவநாதன் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - VI ஓரியூர் புனித அருளானந்தர் திருத்தலத்தில் 13.10.2024 அன்று நடைபெற்றது. 10 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி J. அரோக்கியசாமி, நற்பணி S. அந்தோணி பிரகாஷ், நற்பணி இரா. அருள்பிரகாசம் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி -VII அமைதியகம், காயாவயலில் 20.10.2024 அன்று நடைபெற்றது. 12 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை Sr. பச்சைஜோதி, நற்பணி M. மரிய கிரகோரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி -VIII சாயல்குடி, புனித ஆரோக்கிய அன்னை கோவிலில் 20.10.2024 அன்று நடைபெற்றது. 18 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி M. அருள் மரிய நாயகம், நற்பணி S. ஆரோக்கியசாமி, நற்பணி A. சந்திரபுஷ்பா ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி IX இராசசிங்கமங்கலம், தூய ஆவியார் கோவிலில் 27.10.2024 அன்று நடைபெற்றது. 12 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி M. மரிய கிரகோரி, நற்பணி S. தைனேஸ்மேரி, நற்பணி A. ஜான்சி மேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

## அக்டோபர் 2024 — கடந்த மாதச் செயல்பாடுகள்

- 02.10. 2024 அன்று காயாவயல் அமல அன்னை அமைதியகத்தில் அருளமுது ஆதாரக் கூடுகை நடைபெற்றது. 33 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி J. ஆரோக்கியசாமி, நற்பணி A. ஆரோக்கியசாமி, நற்பணி A. இருதயமேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

02.10. 2024 அன்று பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் அருளமுது ஆதாரக் கூடுகை நடைபெற்றது. 65 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல், நற்பணி GMS. ராணி, நற்பணி R. சேவியர் ஸ்டெல்லாமேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

12.10. 2024 அன்று இடைக்காட்டூர் திருஇருதய ஆண்டவர் திருத்தலம், பணியாளர்களின் வாழ்வும் மற்றும் பணி - அக ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இதில் 56 பணியாளர்கள் கலந்து கொண்டு ததிறந்து மனதுடன் கலந்துரையாடினர்.

12.10. 2024 அன்று சாயல்குடி பங்கு மேலமுந்தல் கிராமத்திற்கு முத்துப்பேட்டை வட்டார பணியாளர்கள் நற்பணி சாந்தா, நற்பணி கலா, நற்பணி மார்கஸ், நற்பணி ததேயுஸ் ஆகியோர் தொடர் களப்பணி ஆற்றினார்கள்.

14.10.24 முதல் 18.10.2024 வரை அருள்சான்று நிலையம், அமைதியகம் மையங்களில் சிவகங்கை மறைமாவட்ட குருக்கள் ஆண்டுத் தியானத்திற்கான சிறப்புச் தொடர் செபம் நடைபெற்றது. இதில் பரமக்குடி, மகிண்டி மிக்கேல்பட்டிணம், இராமநாதபுரம், சாலைக்கிராமம், மானாமதுரை, இராம்நகர், செஞ்சை, செக்கலை, ஆவுடைப்பொய்கை, தேவகோட்டை வட்டார பணியாளர்கள் கலந்து கொண்டு செபித்தார்கள்.

18-19&20.10.2024 அருள்சான்று நிலையத்லில் நற்செய்திப் பணியாளர்களுக்கான ஆண்டுத்தியானம் VI நடைபெற்றது. அருட்தந்தை மைக்கேல் மகிழன் நெறிப்படுத்திய இத்தியானத்தில் 119 பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

20.10.2024 சிவகங்கை வியான்னி அருள்பணி மையத்தில் இரண்டாம் வத்திக்கான் சங்கம் காட்டும் வழியில் இணைந்து பயணிக்கும் திருஅவை என்ற கருத்தரங்கத்தில் 14 பேர் கலந்து கொண்டனர்.

25-26&27.10.2024 அமைதியகத்தில் நற்செய்திப் பணியாளர்களுக்காக ஆண்டுத்தியானம் VII நடைபெற்றது. அருள்தந்தை கிராஸிஸ் மைக்கல் அவர்கள் நெறிப்படுத்தினார்கள்.

26&27.10.2024 திண்டிவனத்தில் இரண்டாம் வத்திகான் சங்க ஏடுகள் குறித்த பயிலரங்கு நடைபெற்றது. இதில் 10 பணியாளர்கள் கலந்து கொண்டார்கள்.

27.10.2024 அன்று அஞ்சுக்கோட்டை பங்கு சின்ன அஞ்சுக்கோட்டை கிராமத்தில் தொடர் களப்பணி நடைபெற்றது. இதில் சி.கே. வட்டார பணியாளர்கள் நற்பணி. டேவிட். நற்பணி பூவானி பாக்கிய செல்வி ஆகியோர் களப்பணி ஆற்றினார்கள்.

26&27.10.24 ஆகிய நாட்களில் திருச்சி பொதுநிலையினர் பயிற்சி மையத்தில் நடைபெற்ற யூபிலி ஆண்டிற்கான சிறப்பு பயிற்சியில் 4 பணியாளர்கள் பங்கேற்றனர்.

## அக்டோபர் 2024 வட்டாரத் தியானக் கூட்டங்கள்

**செக்காலை வட்டாரம்**

செக்காலை வட்டாரத் தியானக் கூட்டம் 19.10.2024 சனிக்கிழமையன்று செக்காலை நற்பணி ஆரோக்கியசாமி, நற்பணி சவரியம்மாள் இல்லத்தில் காலை 10.30 மணிக்கு விவிலிய வணக்கம் மற்றும் வட்டாரப் பணியாளர்களின் தொடக்க வழிபாட்டுடன் ஆரம்பமானது. செயலர் தொடர்பாளராக கலந்து கொண்டு எனக்கு வலுவூட்டுகிறவரின் துணைகொண்டு எதையும் செய்ய ஆற்றல் உண்டு (பிலி 4:13) என்ற இறைவார்த்தை ஒளியில் செய்தி வழங்கி நெறிப்படுத்தனர். பங்குப் பணியாளர் அருள்பணி சார்லஸ் மற்றும் உதவிப் பங்குப்பணியாளர் அருள்பணி டேனியல் திலீபன் ஆகியோர்

கலந்துகொண்டு பணியாளர்களை உற்சாகப்படுத்தி ஆசி கூறினார்கள். நண்பகல் உணவிற்குப்பின் பணியாளர்களின் நம்பிக்கைப் பகிர்வு நடைபெற்றது. பரிந்துரை செபம் மற்றும் கொள்கைப் பாடலுடன் நிறைவுற்ற வட்டாரத் தியனக் கூட்டத்தில் 26 பணியாளர்கள் பங்கேற்றனர்.

நற்பணி L. **ஆரோக்கியசாமி,** வட்டாரக் கண்காளிப்பானர்.

**செஞ்சை வட்டாரம்**

செஞ்சை வட்டாரத் தியானக் கூட்டம் 19.10.2024 சனிக்கிழமையன்று காலை 9.30 மணிக்கு புனித தெரசாள் கோவிலில் நடைபெற்றது. இறைபுகழ்ச்சி, பாவமன்னிப்பு வழிபாட்டை நற்பணி A.R. சூசைராஜ் நற்பணி U. குழந்தைசாமி ஆகியோர் இணைந்து வழிநடத்தனர். தொடர்பாளராக கலந்து கொண்ட நற்பணி மோட்ச அலங்காரம் நற்செய்திப் பணியாளராகிய நான் கிறிஸ்துவிடமிருந்து வலிமைப் பெற்றிருக்கிறேனா? என்ற மையக்கருத்தில் இறைச்செய்தி வழங்கி கூட்டத்தை நெறிப்படுத்தினார். குழு ஆய்வு நடைபெற்றது. 31 பணியாளர்கள் கலந்து கொண்ட இக்கூட்டம் நன்றி செபத்தோடும் கொள்கைப் பாடலோடும் மாலை 3.30 மணிக்கு நிறைவு பெற்றது.

நற்பணி M. **விசுவாசம்,** வட்டாரக் கண்காளிப்பானர்.

**இராம்நகர் வட்டாரம்**

இராம்நகர் வட்டார தியானக் கூட்டம் 20-10-2024 அன்று நற்பணி. தைனேஸ் மேரி இல்லத்தில் காலை 10:30 மணியளவில் புகழ்ச்சி வழிபாட்டுடன் தொடங்கியது. தொடர்பாளராக நற்பணி. தனிநாயகம் கலந்துகொண்டு 'நற்செய்திப் பணியாளராகிய நான் எனக்கு வலுவூட்டுகிறவரின் துணை கொண்டு எதையும் செய்ய ஆற்றல் உண்டு என உணர்ந்து வாழ்கிறேனா? 'என்னும் தலைப்பில் செய்தி வழங்கினார். மதிய உணவுக்குப் பின் குழுப்பகிர்வு நடைபெற்றது. மன்றாட்டு, அறிவிப்பு மற்றும் கொள்கைப் பாடலுடன் கூட்டம் மாலை நான்கு மணிக்கு நிறைவுற்றது. 28 பேர் கலந்துகொண்டனர்.

நற்பணி. S. **ஆரோக்கியசாமி**, வட்டாரக் கண்காணிப்பாளர்.

**CK மங்களம் வட்டாரம்**

சி.கே. மங்கள வட்டார தியான கூட்டம் 20. 10. 2024 ஞாயிறு காலை 10 மணி அளவில் நற்பணி வின்சென்ட், நற்பணி தமிழ்ச்செல்வி ஆகியோரது இல்லத்தில் நடைபெற்றது. தொடக்கப்பிரசன்ன செபத்தை நற்பணி சகாய தமிழ்ச்செல்வியும், நற்பணி ஆரோக்கிய மேரி இறை புகழ்ச்சியையும், பாவமன்னிப்பு வழிபாட்டினை நற்பணி செலினும், தூய ஆவியானவர் செபத்தை நற்பணி டேவிட் அந்தோணியும் வழிநடத்தினார்கள். நெறியாளராக நற்பணி ஜஸ்டின் கபிரியேல் அவர்கள் தொடர்பாளராக கலந்து கொண்டு எனக்கு வலுவூட்டுகிறவரின் துணை கொண்டு எதையும் செய்ய ஆற்றல் பெற்றிருக்கிறேனா? என்ற மையச் சிந்தனையில் வட்டாரத் தியானத்தை வழிநடத்தினார்கள். மதிய உணவுக்கு பின் மூன்று குழுக்களாக பிரித்து குழு ஆய்வு செய்யப்பட்டது. நன்றி மன்றாட்டு, பரிந்துரை செபம், கொள்கை பாடலுடன் கூட்டம் 4 மணிக்கு நிறைவுற்றது. கலந்து கொண்ட பணியாளர்களின் எண்ணிக்கை 27 பேர்.

நற்பணி **எம் டேவிட்,** கண்காணிப்பாளர்

| **வித்தியாசமான எண்களும் அத்தியாவசியமான இறைவார்த்தைகளும்** | |
|---|---|
| ஈசாய் என்னும் அடிமரத்திலிருந்து தளிர் ஒன்று துளிர்விடும்; அதன் வேர்களிலிருந்து கிளை ஒன்று வளர்ந்து கனிதரும். | **எசாயா 11:1** |

சாபத்துக்கு உள்ளாகி நம்மை சட்டத்தின் சாபத்தினின்று மீட்டுக் கொண்டார்.

(கலா 3:13)

தொடக்கத்தில் கடவுளால் விலக்கப்பட்ட மரத்தின் கனியை உண்டதால் அதன் விளைவாக நிலம் சபிக்கப்பட்டது (தொநூ 3:17). ஆனால் ஆபிரகாமைக் கடவுள் அழைத்தபோது உன்னை நான் பெரிய இனமாக்குவேன். உனக்கு ஆசி வழங்குவேன். உன் வழியாய் மக்களினம் அனைத்தும் ஆசி பெறும் என்று வாக்குறுதி அளித்தார் (தொநூ 12:1-2). இந்த மாபெரும் என்றென்றைக்கும் மாறாத வாக்குறுதிதான் இஸ்ரயேல் மக்களை எகிப்தின் அடிமை நிலையிலிருந்து மீட்டுக் கொண்டு வந்தது. அவர்கள் கடவுளுக்கு எதிராக முணுமுணுத்த போதெல்லாம் அவர்களை அளிந்து விடும் அளவுக்கு கடவுளின் சினம் அவர்கள் மீது மூண்டது. ஆனால் ஆபிரகாமுக்கு ஆண்டவர் கொடுத்த வாக்குறுதியை மோசே நினைவு கூர்ந்தபோது கடவுள் தம் மனத்தை மாற்றிக் கொண்டார் (விப 32:9-14). அதன் பிறகு பிற நாடுகள் வியப்படையும் அளவுக்கு இஸ்ரயேல் மக்கள் எல்லா நிலையிலும் பழுகிப் பெருகினார்கள். இந்த மக்கள் மீது இருந்த கடவுளின் ஆசியைக் கண்ட பிறநாடுகளின் அரசர்கள் பொறாமை கொண்டார்கள். அச்சமும் அவர்களை ஆட்கொண்டது. அவர்கள் எரிகோவிற்கு அருகில் வந்தபோது யோவாபு என்ற மன்னன் தனது அரச அலுவலர்களை அழைத்து இஸ்ரயேல் மக்களை குறித்து மாடு. வயல் வெளியில் புல்லை வேறாக மேய்வதுபோல் நம்மைச் சுற்றி எல்லாவற்றையும் மேய்ந்துவிடுவார்கள் என்று கூறினான். உடனே அரசனின் மகன் பாலாக்கு என்பவன் நாம் இந்த மக்களை சபித்துவிட்டால் இவர்களைப் பெருகவிடாமல் தடுத்துவிடலாம் என்று எண்ணி மக்களைச் சபிக்கவும் ஆசி கூறவும் கூடிய பிலயாம் என்ற கடவுளின் மனிதரை அழைத்து வர ஆள் அனுப்பினான். அவர்கள் பிலயாமிடம் வந்தபோது இந்த மக்கள் கடவுளின் ஆசி பெற்றவர்கள் அவர்களை எந்த மனிதரும் சபிக்கமுடியாது என்பதை அறிந்திருந்தும் நான் ஆண்டவரிடம் கேட்டுச் செய்தி தருகிறேன் என்று கூறி வந்தவர்களை அவரோடு தங்க வைத்தார். அனைத்தையும் பார்த்துக் கொண்டிருந்த கடவுள் பிலயாமிடம் உன்னோடு இருக்கிற இந்த ஆள் யார்? என்று கேட்டார். அதற்கு அவர் இஸ்ரயேல் மக்களை சபிக்கும்படி என்னை அழைக்க வந்த பாலாக்கு அனுப்பிய ஆள்கள் என்றார். கடவுள் பிலயாமிடம் நீ அவர்களோடு போகவும் வேண்டாம். அந்த மக்களை சபிக்கவும் வேண்டாம். ஏனெனில் அவர்கள் ஆசிபெற்றோர் என்றார். பின்பு இரண்டாம் முறை நாட்டில் உள்ள பெரிய மனிதர்களைப் பிலயாமிடம் அனுப்பி உமக்கு நிறைய வெகுமதி தருவேன். எனக்காக இந்த மக்களை சபியும் என்று அழைத்தான். கடவுள் ஏற்கனவே அவர்களோடு செல்ல வேண்டாம் என்று கூறியிருந்தும் மீண்டும் ஆலோசனை கேட்டதால் போ என்று சொன்னார். ஆனால் கடவுளின் சினம் பிலாயமின் மீது மூண்டது. இவ்வாறு பிலயாம் புறப்பட்டுப் போனபோது கடவுள் வாய் பேசாத கழுதையின் வாயைத் திறந்து அவருக்கு அறிவு புகட்டினார் (எண் 22:1-35). இந்நிகழ்வை புனித பேதுரு போலி இறைவாக்கினர்களோடு பிலயாமை ஒப்பிட்டு கூலிக்காகத் தீவினைச் செய்ய விரும்பினார். அவர்தம் ஒழுங்கு மீறிய செயலுக்காகக் கடிந்து கொள்ளப்பட்டார். பேச இயலாத கழுதை மனித முறையில் பேசி அந்த இறைவாக்கினரின் மதிகெட்ட செயலைத் தடுத்தது என்று குறிப்பிடுகிறார் (2பேது 2:15-16). கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு மக்களினத்திற்கு எதிராக சாபத்தைக் கூறுவது மதிகெட்ட செயல் என்பதை தூய ஆவியானவர் இங்கே உணர்த்துகிறார். இவ்வாறு பிலயாம் மூன்று முறை பணத்திற்கு ஆசைப்பட்டு இஸ்ரயேல் மக்களை சபிக்கும்படி போனார். ஆனால் மூன்று முறையும் கடவுள் பிலயாம் வாயிலாகவே அவர்கள் மீது ஆசி கூறும்படிச்

செய்தார். கடவுள் சபிக்காதவனை நான் எப்படி சபிக்க முடியும் என்று கூறினார் (எண் 23:8). ஏனெனில் இஸ்ரயேலுக்கு ஆசி கூறுவதே ஆண்டவருக்கு மகிழ்ச்சி (எண் 24:1). பிலயாமின் இறுதி உரையில் ஆபிரகாமுக்குக் கடவுள் தம் வாக்குறுதியின் வழியாக அளித்துள்ள ஆசியை முழு உலகத்திற்கும் பெற்றுத் தரக்கூடிய உலக மீட்பர் இந்த இஸ்ரயேல் இனத்திலிருந்துதான் தோன்றப் போகிறார் என்பதை உணர்ந்து யாக்கோபிலிருந்து விண்மீன் ஒன்று உதிக்கும். இஸ்ரயேலிருந்து செங்கோல் ஒன்று எழும்பும். அது மோவாவின் நெற்றிப் பிறையை நசுக்கும் என்று கல்வாரிச் சிலுவையில் நடைபெறப் போகும் நிகழ்வைக் குறிப்பிடுகிறார் (எண் 24:17). இதிலிருந்து நாம் என்ன அறிந்து கொள்கிறோம்? கடவுள் ஆபிரகாமுக்கு அளித்துள்ள ஆசியை நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாக பெற்று மகிழவே நாம் கிறிஸ்தவர்களாக அழைக்கப்பட்டிருக்கிறோம். கடவுளால் ஆசி வழங்கப்பட்ட மக்களுக்கு எதிராக எந்த மனிதரும் சாபத்தைக் கூறமுடியாது. ஏனென்றால் ஒட்டு மொத்த சாபங்களும் கல்வாரியில் அழிக்கப்பட்டு விட்டது. நம் ஆண்டவர் நம் பாவங்களை மன்னிப்பதற்கு மட்டும் இவ்வுலகில் வரவில்லை. மாறாக ஆபிரகாமுக்கு அளித்த அதே ஆசியை நமக்கும் பெற்றுத் தரவே அவர் சிலுவை சுமந்தார். தூய ஆவியானவர் மிகத் தெளிவாகக் கூறியிருப்பதை கவனமாக வாசித்து அறிவோம். மரத்தில் தொங்கவிடப்பட்டோர் சபிக்கப்பட்டோர் என்று எழுதியுள்ளவாறு நமக்காக கிறிஸ்து சாபத்துக்கு உள்ளாகி நம்மை சட்டத்தின் சாபத்தினின்று மீட்டுக் கொண்டார். ஆபிரகாமுக்கு கிடைத்த ஆசி இயேசு கிறிஸ்து வழியாக பிற இனத்தார்க்கும் (இங்கே பிற இனத்தார் என்பது யூதரலல்லாத நம்மைக் குறிக்கிறது) கிடைக்கவும் வாக்களிக்கப்பட்ட தூய ஆவியானவரை நாம் நம்பிக்கையின் வழியாய்ப் பெற்றுக் கொள்ளவுமே இவ்வாறு செய்தார் (கலா 3:13-14). இதை பவுல் குறிப்பிடுகையில் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அருள்செயலை அறிந்திருக்கிறீர்களே அவர் செல்வராயிருந்தும் உங்களுக்காக ஏழையானார். அவரது ஏழ்மையினால் நீங்கள செல்வராகுமாறு இவ்வாறு செய்தார் (2 கொரி 8:9). இந்த மாபெரும் அருஞ்செயலை அனைவரும் புரிந்து கொள்ளும்படி எடுத்து விளக்கிக் கூறவே நாம் பணியாளர்களாக அழைக்கப்பட்டிருக்கிறோம். நம் ஆண்டவர் சக்கேயுவை விடுவித்தபோது இவரும் ஆபிரகாமின் மகன் தானே என்றார் (லூக் 19:9). பதினெட்டு ஆண்டுகளாக சாத்தானின் பிடியிலிருந்தப் பெண்ணை விடுவித்தபோது இவர் ஆபிரகாமின் மகன் என்றார் (லூக் 13:16). இன்றைக்கு கோவிலுக்குச் சென்று நற்கருணையை வாங்குகிறார்கள். ஆனால் செய்வினைக் கோளாறு இருப்பதாகக் கூறிக்கொண்டு அதைப் போக்குவதற்குப் பல பரிகார வழிகளைத் தேடி அலைகிறவர்களைப் பார்க்கிறோம். அவர்கள்கு எந்த விடுதலையும் கிடைக்காமல் தவிக்கிறார்கள். ஆண்டவரிடம் முழுமையாக நம்பிக்கை வைத்தால் மட்டுமே விடுதலை அடையமுடியும். நம் ஆண்டவராகியக் கடவுள் ஆசி வழங்கியுள்ள அவருடைய பிள்ளைகளுக்கு எதிராக எந்த மனித சக்தியும் எந்த சாபமும் இருக்க முடியாது. ஏனென்றால் யாக்கோபுக்கு எதிரான மந்திர மாயம் ஏதுமில்லை. இஸ்ரயேலுக்கு எதிரான குறி கூறல் ஏதுமில்லை என்று ஆண்டவர் வாக்குறுதி அளித்துள்ளார் (எண் 23:23). இப்படிப்பட்ட உன்னதமான கடவுளின் ஆசியை இயேசு ஆண்டவரின் பெயரால் முதலில் நம் குடும்பங்களில் உள்ள ஒவ்வொருவர் மீதும் கூறிக் கொள்வோம். பிறகு நாம் சந்திக்கின்ற ஒவ்வொருவருக்கும் இந்த உண்மையை எடுத்துச் சொல்லி விடுதலை அடையச் செய்வோம். இயேசு கூறுகிறார், உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும் என்றும், மகன் உங்களுக்கு விடுதலை அளித்தால் நீங்கள் உண்மையிலேயே விடுதலைப் பெற்றவர்களாய் இருப்பீர்கள் என்கிறார் (யோ 8:32-36).

நற்பணி **ஆ.விசுவாசம்,** செஞ்சை.

## புனித ஜோசப்பாத்



ஆயர், மறைசாட்சி (கி.பி. 1581 - 1623)

ஜோசப்பாத், உக்ரெய்ன் நாட்டில் பிறந்தவர். பாசில் சபையில் சேர்ந்து பிறகு குருவானார். விரைவில் இவர் சிறந்த மறைபோதகர் என்ற புகழ் பெற்றார். பின் ஆயராக நியமிக்கப்பட்டார். பிரிவினைச் சபையாருடன் நெருங்கிய நட்பு கொண்டிருந்தார்.

அவர்களில் சிலர் இதனால் இவரை ஐயுற்றனர். 'திருவழிபாட்டு முறைகளிலும் மற்ற சட்டதிட்டங்களிலும் இவர் ஊடுருவுகிறார். நாளடைவில் உரோமன் கத்தோலிக்கருடன் நம்மை ஒன்றாக்கிவிடுவார் என்று அஞ்சினார். உண்மையில் இவர் தமது திறமையினால் பிரிவினை சபைச் சகோதரர் பலரையும் ஒரே மந்தையில் கொண்டு வந்து சேர்த்தார். ஆனால் 'ஸ்லாவோனிக்' என்று அழைக்கப்படும் அவர்களின் வழிபாட்டு முறைகளைப் பெரிதும் பாராட்டினார் ஆதரித்தார். ஆனால் அதனை அழிக்க முயன்றார் என்பது இவருடைய பகைவர்களின் பெரியதொரு குற்றச்சாட்டு. விரைவில் பிரிவினை சபையின் ஆட்சிப் பீடத்தில் பெரியதொரு மாற்றம் ஏற்பட்டது. இலத்தீன் கிறிஸ்தவர்களாக மாற்ற முயலுகிறார் என்ற இவர் மீது குற்றஞ்சாட்டினார். அப்போதிருந்த போலந்து நாட்டு ஆயர்கள் இவருக்குப் போதிய ஆதரவு அளிக்கவில்லை. தமது மறைமாநிலமாகிய போலோக்குக்குப் போகக் கூடாது என்று இவரைத் தடுத்தனர். ஆனால் இவர் துணிச்சலுடன் சென்றார். ஒரு பிரிவினை சபைக் குரு இவரை இழிவாகத் திட்டியபடியே இவரை விரட்டியடித்தார். இதற்குள் பிரிவனைச் சபையார் ஒன்றுகூடி ஆயரின் இல்லத்தினுள் புகுந்தனர். மூளை சிதறுமாறு அடித்து இவரின் தலையைப் பிளந்தனர். இறுதியில் சுட்டனர். இவரது உடலை ஆற்றில் எறிந்தனர். கிழக்கத்திய திருச்சபையின் முதல் புனிதர் இவர்.

**சிந்தனை** : 'ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே! இறைமகனே என் பேரில் இரக்கமாயிரும்.' என்று அடிக்கடி நம் புனிதரை போல நாமும் சொல்லி இறையருளைப் பெறுவோம்.

நற்பணி **செங்கோல்மேரி,** காளையார்கோவில்

## ஒரு பணியாளரின் மன்றாட்டு



புயல்காற்றைப் பூந்தென்றலாக மாற்றும் இறைவா! மண்ணுலகை அழிக்க - இனி வெள்ளப்பெருக்கு வரவே வராது என்ற உமது வாக்குறுதியை நினைவு கூர்ந்து, அழிவு ஏற்படுத்தும் மிகக் கன மழை, வெள்ளம், புயல், சூறாவளி, இவைகளிலிருந்து எங்கள் நாட்டைக் காப்பாற்றி, மக்கள் - நீர் தரும் அமைதியுடன் மகிழ்ச்சியோடு வாழும் சூழலை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இறைவா! உம்மை மன்றாடுகிறோம்.

நற்செய்திப் பணிக்குழுவின்
இணைய தளம்
www.arulchandrunilayam.org

# மக(னே)ளே நீ எங்கே?

என்றும் போல் அன்றும் ஆண்டவர் மாலையில் உலாவச் சென்றபோது ஆதாமைக் காணவில்லை. எனவே அவர் கூவி அழைத்தார். ''ஆதாம் நீ எங்கே?''

ஏதேன் தோட்டத்தில் ஆரம்பமான இந்தத் தேடல் இறைவன் விண்ணைவிட்டு மண்ணில் பெத்லகேமில மாட்டுத் தொழுவத்தில் மனிதக் குழந்தையாக பிறந்ததில் முடிவடைகிறது. ''அவர் தமக்குரியவர்களிடம் வந்தார் அவருக்கு உரியவர்கள் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை'' (யோவான் 1:11).

மனிதனைத் தேடி அலைகின்ற இறைவனின் பயணத்தை பழைய ஏற்பாடு முழுவதும் காணலாம். எசாயா இறைவாக்கினர் ''வாருங்கள். இப்பொழுது நாம் வழக்காடுவோம் உங்கள் பாவங்கள் கடுஞ்சிவப்பாய் இருக்கின்றன. எனினும் உறைந்த பனி போல அவை வெண்மையாகும். இரத்த நிறமாய் அவை சிவந்திருக்கின்றன. எனினும் பஞ்சைப் போல் அவை வெண்மையாகும். மனமுவந்து நீங்கள் எனக்கு இணங்கி நடந்தால் நாட்டில் நற்கனிகளை உண்பீர்கள்'' எனகிறார் ஆண்டவர் (எசா 1: 18- 19).

''மானிடரை நம் உருவிலும் நம் சாயலிலும் உண்டாக்குவோம் (தொநூ 1:2) அவ்வாறு தனது உருவிலும் சாயலிலும் மனிதனைப் படைத்து அவனுக்குத் தன் உயிர் காற்றையே உயிர்மூச்சாக அளித்து அனைத்தும் நிறைந்த செல்வச் செழிப்பான ஏதேன் தோட்டத்தையும் அளிக்கிறார். அன்றியும் ''அவன் தனியாக இருப்பது நல்லதன்று அவனுக்குத் தகுந்த துணை உருவாக்குவேன். (தொநூ 2:18) என்று அவனுக்குத் துணையாகவும். இணையாகவும் ஏவாளை அளிக்கிறார். தான் படைத்த அனைத்தின் மீதும் அவர்களுக்கு அதிகாரத்தையும் அளிக்கிறார்.

''நன்மை தீமை அறிவதற்கு ஏதுவான மரத்திலிருந்து மட்டும் உண்ணாதே'' ஏனெனில் அதிலிருந்து நீ உன்னும் நாளில் சாகவே சாவாய்'' (தொநூ 2:17) என்று கட்டளையிட்டார். இவ்வாறு மனிதனுக்கு ஏற்படும் தீமையை முதலில் சுட்டிக் காட்டுகிறார்'' ஆனால் சூழ்ச்சி மிக்கவனும் வஞ்சகனுமாகிய அலகையின் கண்ணியில் வீழ்ந்த மனிதன் இறைவன் தடை செய்த செயலைச் செய்தான். இறைக் கட்டளையை மீறினான். தான் செய்தது தன்னை உறுத்தியதால் இறை பிரசன்னத்திலிருந்து ஓடி ஒளிந்தான். இதைக் கண்ட இறைவன் ஆதாம் நீ எங்கே? என்று வினவினார். இன்னும் பாவத்தில் மூழ்கி இறை பிரசன்னத்திலிருந்து ஓடி ஒளிந்துகொள்கிற நம்மிடமும் இறைவன் கேட்கிறார். மகளே மகனே நீ எங்கே?.

மனிதனை ஏதோன் தோட்டத்தில் இருந்து வெளியேற்றினார். தோட்டத்தின் வாயில்களில் கெருபீன்களை காவல் நிறுத்தின இறைவன் உங்களுக்காக ஒரு மீட்பரை நான் அனுப்புவேன். பாவம் செய்து இறை பிரசன்னத்தலிருந்து அகன்று இழந்த விண்ணரசை நமக்குத் திருப்பித் தர விரும்புகிற அதே இறைவன் என்னுடனும் உங்களிடமும் கூறுகிறார். ''மகனே மகளே வாருங்கள் நாம் வழக்காடுவோம்.

மகதலா மரியாவும் பேதுருவும் கடவுளிடம் திரும்பி வந்தார்களுக்கு சிறந்த சான்றுகள். மனம் வருந்தி மன்னிப்பு கேட்க துணிந்த போது அவர்கள் அருள்

பெற்றனர். நாமும் என்றாவது திரும்பி வருவோம் என்ற இறைவன் காத்திருக்கின்றார். எத்தகைய கொடிய பாவங்கள் செய்த போதிலும் மன்னிப்பும் அருளும் தர காத்திருக்கும் தந்தை இறைவனிடம் திரும்பிச் செல்வோம்.
மனம் வருந்தி பாவங்களை அறிக்கை செய்வோம்.

நற்பணி V.செபஸ்டியன் தார்சிஸ், செஞ்சை

## கடவுளுக்குப் பணி செய் !

நம்மைப் படைத்து, பாதுகாத்து, பராமரித்து வருகின்ற கடவுளோடு விண்ணக மகிமையில் பங்கு பெறவேண்டுமானால், எல்லாவற்றுக்கும் மேலாக கடவுளை அன்பு செய்து, அவருக்கே பணிவிடை செய்தாகவேண்டும். இவ்வுலகக் காரியங்களைச் செய்துகொண்டு பகுதிநேர இறைப்பணி செய்வதை இயேசு குறை கூறவில்லை (1 கொரி 4:12). கடவுளைவிடச் செல்வத்தை அதிகம் விரும்பி, அதைச் சேர்க்கும் நோக்கத்திற்காகவே செயல்படுவதுதான் தவறு என்று கூறுகிறார். அதிகமான செல்வத்தைக் கொண்டிருப்பதால் ஒருவருக்கு வாழ்வு வந்துவிடாது (மத் 19:16-22). உடல்நலம், சமாதானம், தூய ஆவியாரின் கொடை, விண்ணகவாழ்வு ஆகியவற்றைச் செல்வத்தால் பெற்றுக்கொள்ள முடியாது. ஆனால், செல்வத்தை இவ்வுலகின் மேன்மையாக் காட்டி கடவுளின் பணியாளர்களை, சாத்தான் சோதித்துக்கொண்டே இருப்பான். இச்சோதனை தற்காலிகமானது. இது இறைவனால் அழித்தொழிக்கப்படும். இயேசுவை மிக உயர்ந்த ஒரு மலைக்குக் கூட்டிச் சென்ற அலகை, உலக அரசுகள் அனைத்தையும், அவற்றின் மேன்மையையும் அவருக்குக் காட்டி, 'என்னை வணங்கினால் இவை அனைத்தையும் உமக்குத் தருவேன்' என்றது. அப்பொழுது இயேசு அதனைப் பார்த்து 'அகன்று போ சாத்தானே' 'உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவர் ஒருவருக்கே பணி செய் என்று மறைநூலில் எழுதியுள்ளது' (மத் 4:8-10) என்கிறார். உடனே அலகை அவரை விட்டுச் சென்றது. ஒப்பற்ற செல்வமாகிய இயேசுவையே சாத்தான் ஏமாற்றப் பார்க்கிறான் என்றால், நாம் எம்மாத்திரம்? எனவே, விழிப்பாயிருங்கள். எல்லா அருளும் நிறைந்த கடவுள், இயேசு கிறிஸ்துவுக்குள் என்றும் நிலைக்கும் தம் மாட்சியில் பங்குகொள்ள உங்களை அழைத்திருக்கிறார் (1 பேது 5:8-10) என்பதை அறிந்து அனைத்தையும் தர வல்லவரான கடவுளுக்கே பணி செய்யுங்கள்.

> உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவர் ஒருவருக்கே பணி செய். (மத் 4:10)

இன்றைய நாள்களில் அநேகர் கடவுளுக்கும் செல்வத்துக்கும் சேர்த்துப் பணிவிடை செய்ய முயற்சிக்கின்றார்கள். இருமனமுள்ள நிலையற்ற போக்குடையவர்கள் ஆண்டவரிடம் ஏதாவது பெறமுடியும் என நினைக்காதிருக்கட்டும் (யாக் 1:8). கடவுளின் தூதரால் நெருப்பிலிருந்து காப்பாற்றப்பட்ட லோத்தின் மனைவி, தான் சேர்த்து வைத்த செல்வத்தை நினைத்துத் திரும்பிப் பார்த்தாள். உடனே உப்புத் தூணாக மாறினாள் (தொநூ 19:26). ஆகவே, கடவுளுக்கு நாம் பணிந்து நடக்கவில்லையென்றால், இது போன்ற ஒரு பரிதாபமான நிலைமை ஏற்பட வாய்ப்புண்டு. இவ்வுலகில் நாம் வாழ்வதற்குச் செல்வம் தேவைதான். ஆனால், அதைச் சேர்த்து வைப்பதற்கு அல்ல, செலவிடவே நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலாளராக இருக்கும் நாம், தலைவருக்குக் கணக்குக் கொடுத்தாக வேண்டும். செல்வம் சேர்ப்பதையே நோக்கமாகக் கொண்டு செயல்படுவது கடவுளுக்கு ஏற்புடையதல்ல. ஆகவே, நாம் கடவுளுக்கே பணி செய்யவேண்டும்.

"எவரும் இரு தலைவர்களுக்குப் பணிவிடை செய்யமுடியாது. ஏனெனில், ஒருவரை வெறுத்து மற்றவரிடம் அவர் அன்பு கொள்வார். அல்லது ஒருவரைச் சார்ந்து கொண்டு மற்றவரைப் புறக்கணிப்பார். நீங்கள் கடவுளுக்கும் செல்வத்துக்கும் பணிவிடை செய்யமுடியாது" (மத் 6:24) என்கிறார். கடவுளுக்கும் செல்வத்துக்கும் பணிவிடை செய்யாதீர்கள் என்று சொன்ன இயேசு ஆண்டவர், அதற்கான காரணத்தையும் கூறுகிறார். ஆனால், நாம் இவ்வுலகத்தின் செல்வத்தைத் தேடி பெருக்கிக் கொள்ளப் பார்க்கிறோம். இவ்வாறு இரண்டு முரண்பட்ட செயல்களையும் ஒரே நேரத்தில் செய்துகொள்ளலாம் என்று நினைக்கிறோம். இரண்டில் ஒன்றைத்தான் நாம் தெரிந்து கொள்ளவேண்டும். கடவுளுக்குப் பணிவிடை செய்யத் தன்னை முழுமையாக அர்ப்பணித்த யோசுவா சொன்னபடி 'யாருக்கு ஊழியம் செய்வீர்கள்' (24:15) கடவுளா? செல்வமா? எது நம் உள்ளத்தை ஆட்கொண்டிருக்கிறது என்பதை முடிவு செய்தாக வேண்டும். 'எதற்கு அடிமைகளாக உங்களை ஒப்படைத்துக் கீழ்ப்படிகிறீர்களோ அதற்கே நீங்கள் அடிமைகள் என்பது உங்களுக்குத் தெரியும் அன்றோ? அப்படியிருக்க நீங்கள் பாவத்திற்கு உங்களையே அடிமையாக்கினால் சாவீர்கள். நீங்கள் கடவுளுக்குக் கீழ்ப்படிந்தால் அவருக்கு ஏற்புடையவர்கள் ஆவீர்கள்' (உரோ 6:16).

> எவரும் இரு தலைவர்களுக்குப் பணிவிடை செய்ய முடியாது. (மத் 6:24)

புனித பேதுரு, எல்லாவற்றையும் விட்டுவிட்டு (மத் 19:27-30) இறைப்பணியை முழுமையாகச் செய்ய தன்னை அர்ப்பணித்த நாளில், கால் ஊனமுற்றவரைப் பார்த்து 'வெள்ளியும் பொன்னும் என்னிடமில்லை என்னிடம் உள்ளதை உமக்குக்கொடுக்கிறேன் இயேசு கிறிஸ்துவின் பெயரால் எழுந்து நடந்திடும்' (திப 3:6) என்று சொன்னவுடன் கடவுளின் வல்லமை வெளிப்பட்டது. கடவுளுக்குப் பணி செய்தவர்களெல்லாம் நம்பிக்கை கொண்டவர்களாய் இறந்தார்கள். வாக்களிக்கப்பட்டவற்றை அவர்கள் பெறவில்லையெனினும், தொலைவில் அவற்றைக் கண்டு மகிழ்ந்தார்கள். இறைவனோடு வாழும் 'நிலைவாழ்வே' அவர்களின் குறிக்கோள். மகிமையான விண்ணகத்தில் குடியுரிமை பெறவேண்டும் என்பதே அவர்களின் பேராவல். எனவே, இவ்வுலகில் தாங்கள் அன்னியர்கள் என்பதையும், தற்காலக்குடிகள் என்பதையும், ஏற்றுக்கொண்டார்கள் (எபி 11:13). இவ்வுலகில் யாதொன்றிற்கும் நீ பணிவிடை புரியவேண்டாம். ஏனெனில், உன் கடவுளும் ஆண்டவருமாகிய நான் இதைச் சகித்துக் கொள்ளமாட்டேன் (விப 20:5). எனக்குப் பணிவிடை புரிபவர், 'நான் செயலாற்றும் அந்நாளில் அவர்கள் எனது தனிப்பெரும் சொத்தாக இருப்பார்கள்' 'ஒரு தந்தை தமக்குப் பணிவிடை செய்யும் மகன் மீது கருணை காட்டுவது போல் நான் அவர்கள் மீது கருணை காட்டுவேன்' (மலா 3:17) என்கிறார் படைகளின் ஆண்டவர்.

'எசேக்கியா' என்ற நற்செய்திப் பணியாளரைக் கடவுள் அழைத்தார் "உன்னைக் கொண்டு பெரிய காரியங்களைச் செய்யப் போகிறேன். ஆகையால், 'யூனர்டோக்' என்ற தீவுக்கு நீ நற்செய்திப் பணி செய்யப்போ" என்றார். கடவுளின் வார்த்தைக்குப் பணிந்து பணியாளர் சென்றார். பல நாள்கள் ஆகியும் ஒருவரும் அவருடைய வார்த்தையை ஏற்கவில்லை. சோர்ந்துபோன எசேக்கியா கண்ணீரோடு செபித்தார். அப்பொழுது, கடவுள் 'நீ என்னை நம்பாமல், தீவிலிருந்துத் திரும்பிச் செல்வதற்காக உன் படகை கரையிலேயே கட்டி வைத்திருக்கிறாய். அதை முதலில் அவிழ்த்து விடு' என்று சொன்னார். எசேக்கியா இறை நம்பிக்கையோடு படகை அவிழ்த்துவிட்டார். அதன்பிறகு 'தீவே' இறைவார்த்தைகளைக் கேட்டு மனம்மாறி மீட்படைந்தது. ஆகவே, அழிந்துபோகும் உலகச் செல்வங்களுக்காக அல்ல, என்றும் அழியாத விண்ணக மகிமையில் பங்குபெறக் கடவுளுக்கே பணி செய்வோம்.

நற்பணி **ஆரோக்கியசாமி.ஜே**

நற்செய்தி அறிவிப்புப் பணிக்குழு
சிவகங்கை மறைமாவட்டம்

# விண்ணகப் பிறப்படைந்த நற்செய்திப் பணியாளர்கள்

1. நற்பணி தனிஸ்லாஸ்
2. நற்பணி S. செங்கோல்
3. நற்பணி A. பீட்டர் பெருமாள்
4. நற்பணி A. வேதமுத்து போதகர்
5. நற்பணி A. லூர்து
6. நற்பணி M. சிலுவை முத்து
7. அருள்சகோ அருள் தெரஸ் CIC
8. நற்பணி S. குழந்தை ச் சாமி
9. நற்பணி C.M. பொன்னதத்
10. நற்பணி S. ஆசை
11. நற்பணி ஞான பிரகாசம்
12. நற்பணி A. பெஞ்சமின்
13. நற்பணி T. சேசு
14. நற்பணி A. மரிய முத்து
15. நற்பணி S. மேரி ஜோஸ்பின்
16. அருள்சகோ A. இராபின் SHJ
17. நற்பணி S. இஞ்ஞாசி
18. நற்பணி A. இருதயம்
19. நற்பணி M. துரைச்சாமி
20. நற்பணி A. யாகப்பன்
21. அருள்சகோ சமாதானம் CIC
22. நற்பணி F. மரிய பூரணம்
23. நற்பணி A. தர்ம ராஜ்
24. நற்பணி S. ஹென்றி ஜேசுதாஸ்
25. நற்பணி S. அம்பு ரோஸ்
26. நற்பணி P. எலிசபெத் ராணி
27. நற்பணி A. அசோக் ராயன்
28. நற்பணி I. பிரகாசம்
29. நற்பணி M. மரிய நாயகம்
30. நற்பணி S. தைனஸ் மேரி
31. நற்பணி M. இராஜா மணி
32. நற்பணி V. அடைக்கலம்
33. நற்பணி M. அருள்
34. நற்பணி S. சின்னப்பன்
35. அருள்சகோ மேரி செலஸ்டின் CIC
36. அருள்சகோ ஆன்ரு பொபோலா CIC
37. நற்பணி S. இராஜம்மாள்
38. நற்பணி S. இராயப்பன்
39. நற்பணி A. லில்லி ஜோஸ்பின்
40. நற்பணி T. ஆசை அருள்
41. நற்பணி A. சவரிமுத்து
42. நற்பணி N. புஷ்பம்
43. நற்பணி பு. அருளாயி
44. நற்பணி S.ஜீவரத்தினம்
45. நற்பணி J. சேசு மேரி
46. நற்பணி S. சேசு ரத்தினம்
47. நற்பணி A. சேசு அன்னமேரி
48. நற்பணி S. மரியம்மாள்
49. நற்பணி M.A.ஜான் பாத்திமா செல்வன்
50. நற்பணி K. சேவியர்
51. நற்பணி இ. செபஸ்தியம்மாள்
52. நற்பணி வே. குழந்தையம்மாள்
53. நற்பணி S. குளோரி ராயன்
54. நற்பணி M. சேசு ராஜ்
55. நற்பணி R. லூர்து மேரி
56. நற்பணி M.C. மார்சலின்
57. நற்பணி P.S. அம்பு ரோஸ்
58. நற்பணி J. லூர்து மரிய மிக்கேல்
59. நற்பணி A. மரிய அடைக்கலம்
60. நற்பணி A. தார்ஸ் சில்லா
61. நற்பணி A. பிரான்சிஸ் பெல்சிட்டா
62. நற்பணி A. ஜெயராணி
63. அருள்சகோ ரீட்டா அன்னமேரி CIC
64. நற்பணி K. ஆரோக்கிய சகாயராஜ்
65. நற்பணி S. அந்தோணி
66. நற்பணி A. அருள் மேரி
67. நற்பணி A. ஆரோக்கியம்
68. நற்பணி I. அல்போன்சா
69. நற்பணி A. மிக்கேலம்மாள்
70. நற்பணி M. ஆரோக்கியம்
71. நற்பணி S. வணக்கமேரி
72. நற்பணி S. அருள்சாமி
73. நற்பணி A. ரபோனி
74. நற்பணி A. இரத்தினம் அம்மாள்
75. நற்பணி A. சந்தியாகு
76. நற்பணி A. சகாய மேரி

77. அருள்சகோ. தியோனி CIC
78. நற்பணி A. இஞ்ஞாசியம்மாள்
79. நற்பணி V. சந்தியாகு மேரி
80. அருள்சகோ. பிரிஸ்கா CIC
81. நற்பணி A. அற்புதம்
82. நற்பணி V. குழந்தை அருள்
83. நற்பணி A.யூ. அருள்சாமி
84. நற்பணி R. அந்தோணியம்மாள்
85. நற்பணி A. ஜெயபால்
86. நற்பணி K. மங்கையர்கரசி
87. நற்பணி A. சூசை மேரி
88. நற்பணி S. அருளானந்தம்
89. நற்பணி R. மைக்கேல்
90. அருள்சகோ. C. மரியதாஸ் SHJ
91. நற்பணி S. அன்ன ஜெபமாலை
92. நற்பணி A. சூசை மாணிக்கம்
93. நற்பணி M. சேசு நேசன்
94. நற்பணி A. குழந்தைச்சாமி
95. நற்பணி A. சூசைமாணிக்கம்
96. நற்பணி V. மாசிலா மேரி
97. நற்பணி R.S. ஆரோக்கிய மேரி
98. நற்பணி I. சூசைமேரி
99. நற்பணி R. ஜெய உபகாரி
100. நற்பணி M.S. ஞானப்பிரகாசம்
101. நற்பணி பரிமளா காந்தி
102. நற்பணி. ஜெயசீலி பிரிட்டோ
103. நற்பணி R.ஸ்டீபன்
104. நற்பணி A. சூசை அருள்மேரி
105. நற்பணி S. ஜாக்குலின் புளோரிடா
106. நற்பணி S. ஜோசப்
107. நற்பணி P. மரிய செல்வம்
108. நற்பணி T. வின்சென்ட் நாதன்
109. அருள்தந்தை அல்போன்ஸ் நாதன்
110. நற்பணி T. அமல் தெரஸ்
111. நற்பணி குழந்தைச்சாமி
112. நற்பணி போஸ்கா மேரி
113. நற்பணி S.பங்கிராஸ்

விண்ணகப் பிறப்படைந்த
நற்செய்திப் பணியாளர்கள்
இறைவனில்
இளைப்பாறுவார்களாக

# இது சாத்தியமா ?

பணியாளர்: ஆண்டவரே இது நியாயமா? இது நீதியா? இவ்வாறு தாங்கள் செய்யலாமா?

ஆண்டவர்: ஏன் பதறுகிறாய்! நிதானமாய்ச் சொல். உனக்கு என்ன வேண்டும்?

பணியாளர்: என் பக்கத்து வீட்டுக்காரர் பெயர் குப்புசாமி. எனக்கு நெருங்கிய நண்பர். நேற்று கோவிலுக்கு உம்மிடம் வந்து வேண்டிய பின் யாராவது அவரது பெயரைக் கேட்டால் குப்புமி என்கிறார். உம்மிடம் செபித்ததற்காக கிடைத்த பயனா இது?

ஆண்டவர்: அவன் கேட்டதைத் தானே கொடுத்தேன். அவன் என்னிடம் வேண்டிய போது 'சாவே வரக்கூடாது என்று வேண்டினான். ஆகவே தற்போது அவனது பெயரை அவன் உச்சரிக்கும் போது 'சா' வரவில்லை.

பணியாளர் : ஓ அப்படியா ஆண்டவரே!

ஆண்டவர்: எனக்கு சாவே வரக்கூடாது: துன்பமே என் வாழ்வில் வரக்கூடாது என்றெல்லாம் வேண்டத் தொடங்கி யிருக்கிறார்கள் மக்கள்.

பணியாளர்: பணியாளர்களைப் பொறுத்த மட்டிலும் உமது மாட்சிக்காக துன்பத்தை ஏற்று வாழ்வது சாத்தியமே என்ற நிலையில் வாழத் தொடங்கி இருக்கிறார்கள். கண்ணீரோடு விதைப்பவர்கள் தானே அக்களிப்போடு அறுவடை செய்ய முடியும் (திபா 126:5)!. துன்பம் என்பது மாறுவேடம் போட்ட ஆசி என்று அன்னை தெரசா சொல்லி வந்தாரே!

நற்பணி **அருள் இளங்கோ,**
இராம்நகர்

# விண்ணகம் நமக்குத் தாய்நாடா?
## (யூபிலி ஆண்டின் தயாரிப்பாக)

“சுஜித் நீ அமெரிக்கா போகும் போது என் மகளுக்கு கொடுத்து விட கொஞ்சம் பலகாரம் , ஊறுகாய், பொடி வகைகள் எல்லாம் ரெடி பண்ணி வச்சிருக்கேன். கொண்டு போனீனா அவளே வந்து வாங்கிக்குவா” ஆர்வமாய் வந்து கேட்ட அடுத்த வீட்டு மாமியைப் பார்த்து புன்னகையுடன் தலை அசைத்தான் சுஜித்.

“டே தம்பி! நீ போயிட்டு வரும் போது எனக்கு கோடாலி தைலம் வாங்கிட்டு வரியா” கார் டிரைவர் தயங்கிக் கொண்டே கேட்க 'கண்டிப்பாண்ணே' என்றான் சுஜித்.

“சுஜித் உன்னைய பிரிஞ்சு எப்படித்தான் இருக்கப் போறோமோ. ரொம்ப கவலையா இருக்குடா. வீடே வெறிச்சுன்னு ஆயிரும். ஒவ்வொரு நாளையும் கடந்து போறதே பாரமா போயிடுமோன்னு இருக்கு” கவலையோடு பேசிக்கொண்டிருந்த அம்மாவின் கரங்களை ஆதரவாய் பிடித்துக் கொண்டான் சுஜித்.

“Bro அமெரிக்கா போயிட்டு எங்களை எல்லாம் மறந்துற மாட்டியே. அப்பப்ப கூகுள் - மீட்டில் பேசிக்கிருவோம்” என்ற நண்பர்களிடம் “கண்டிப்பா” என்று மலர்ச்சியுடன் சிரித்தான்.

ஓரிரு நாள்கள் நகர அன்று ஷோபாவில் தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்து இருந்தான். அப்பா “என்னடா என்னாச்சு ... ஏன் இப்படி இருக்க” என்று கேட்க “விசா கிடைக்கவில்லை அப்பா” என்று முக சோர்வுடன் கூறுகிறான். அவனது வெளிநாட்டுக் கனவு தவிடுபொடியானது.

நாம் கிறித்தவர்கள். நாம் குருக்கள். நாம் நற்செய்திப்பணியாளர்கள் நாம் கண்டிப்பாக விண்ணகப் பேரின்பத்திற்கு போய்விடுவோம் என்று நினைத்தால் அது தவறு. மனமாற்றம் பெற்ற தூய வாழ்வு அது தொடர்நிலையாக நம் வாழ்வில் இருந்தால் மட்டுமே விண்ணக மகிமை சாத்தியம். “விண்ணக வீடு” யாருக்கெல்லாம் கிடைக்கும் யாருக்கெல்லாம் கிடைக்காமல் போயிற்று என்ற சிந்தனைக்குள் நுழைவோம். அதன் வழியாக புனிதர்கள் அனைவர் பெருவிழாவையும், இறந்த நம்பிக்கையாளர் நினைவையும் கொண்டாடுகிற இம்மாதத்தில் தியானித்துப் பார்க்க அழைக்கப்படுகிறோம்.

**நரக வீட்டிற்கு நகர்ந்து சென்றவர்கள்:**

பத்துத் தோழியர் உவமையில் வரும் ஐவர் மணமகன் வர காலதாமதமாகவே உறங்கி விட அவர் வந்த போது திருமண மண்டபத்திற்குள் நுழைய முடியவில்லை. கதவு அடைக்கப்பட்டது. அவர் அடைத்ததை திறக்கக் கூடியவர் யாருமில்லையே. அவர் வரும் நாளும் வேளையும் தெரியாத நிலையில் தொடர்ந்து செயல்பட வேண்டிய நம்பிக்கையும் எதிர்நோக்கும் இல்லை என்றால் விண்ணக வீட்டை இழந்து போகவேண்டியதுதான். ஆயத்தமில்லாத, விழிப்புணர்வற்ற, வரும் போது பார்த்துக் கொள்ளலாம் என்றிருந்தால் விண்ணகப் பேரின்பத்தை இழந்து போக வேண்டியதுதான்.

தாலந்து உவமையில் தனக்குக் கொடுக்கப்பட்ட தாலந்தை புதைத்து வைத்தவனை “பயனற்ற பணியாளனை புறம்பே உள்ள இருளில் தள்ளுங்கள்” (மத் 25:30) என்கிறார் நம் ஆண்டவர். அர்ப்பணம் வாங்கியும் நம்மிடமுள்ள திறமைகளை புதைத்து வைத்துக் கொண்டிருப்போர் விழித்துக் கொள்ளுங்கள்.

குரலற்றோரின் குரலாய் இல்லாமல், ஆதரவற்றவரை ஆதரிக்காமல் இருந்தால், விளிம்புநிலை மக்களை கண்டு கொள்ளாமல் இருந்தால், தேவைப்படுகின்ற இடத்தில் கரங்களை சுருக்கிக் கொண்டோமென்றால் நரகம்தான் முடிவேயில்லா தண்டனைதான் (மத் 25:31-46) .

செல்வந்தர்கள் ... தனக்கு தனக்கு என சுயநலத்தோடு பகிர்தல் இன்றி வாழ்ந்த அறிவற்ற செல்வர்களைப் பார்க்கிறோம். (லூக் 12:16-20, 16:19-31) இவர்கள் விண்ணகத்திற்கு போக ஆசைப்படுவது காற்றைப் பிடிக்க முயல்வதற்கு ஒப்பாகும். நரகத்தை இவ்வுலகிலேயே பட்டா போட்டு வாங்கியவர்கள் இவர்கள். செல்வரான இளைஞரோ, கட்டளைகளைக் கடைபிடித்தும் என்ன பலன், பகிர மனமில்லையே. இயேசுவின் விண்ணக யோசனை பிடிக்காமல் வருத்தமாய் நகர்ந்து சென்றார். எங்கே? நரகத்தை நோக்கித்தான்.

'பாவம் செய்கிறவருக்கு செல்வத்தைச் சேர்த்து வைக்கும் வேலையைக் கொடுக்கிறார்' (சஉ 2: 26) என்கிறார் சபை உரையாளர்.

"கோழைகள், நம்பிக்கை இல்லாதோர், அருவருப்புக்குரியோர்.... ஆகிய அனைவருக்கும் நெருப்பும் கந்தகமும் எரியும் ஏரியே உரிய பங்கு" (திவெ 21:8) என்கிறது இறைவார்த்தை.

இன்னும் எத்தனை எத்தனை எச்சரிக்கை இறைவார்த்தைகள் நம்மை நெறிபடுத்தி, தெளிவு படுத்தி தூய வாழ்வு வாழ அழைப்பு விடுக்கின்றன. அந்த இறைவார்த்தை ஒளியில் நரகத்திற்கு தப்பித்துக் கொள்வோம். "தெளிவாக்கப்படுவதெல்லாம் ஒளியாகிறது" (எபே 5:14) அல்லவா!

**விண்ணக வீடு யாருக்கு?:**

"ஒரு காலத்தில் இருளாய் இருந்த நீங்கள் இப்போது ... ஒளியாய் இருக்கிறீர்கள்" (எபே 5:8). ஆம் பலரும் அறிந்தோ அறியாமலோ பாவ இருளில் வாழ்ந்து இறைவார்த்தை ஒளியில் தம்மையே அறிந்து கொண்டு, தம் வாழ்வை மாற்றி கொண்டு புதிய தூய வாழ்வுக்குக் கடந்து வருகின்றனர். சிலர் இயல்பாகவே தூய்மையில் நிலைத்திருந்து தூயவர்களாகவே, ஒளி பெற்ற மக்களாகவே கடவுளுக்கு உகந்த வாழ்வு வாழ்ந்து ஒளியின் இருப்பிடத்திற்கு சென்று விடுகிறார்கள்.

புனிதர்கள், திருத்தூதர்கள், இன்னும் நாம் அறியாத பலரும் தூய வாழ்விலே நிலைத்திருந்து இன்று விண்வாழ்வில் பங்கேற்றிருக்கின்றனர். சிலரோ ஆடம்பரமாகவும், உலகப் போக்கிலான வாழ்விலும் உழன்று பின் மனம் திரும்பி (திருந்தி) இறைவனுக்காகவே வாழ்வை தன் உயிரை பெரிதாக எண்ணாமல் இறைப் பணிக்காக தம்மை முழுமையாய் அர்ப்பணித்து அதன் மூலமாக இறைவனின் சந்நிதானத்தை அடைந்தவர்கள்.

இதில் பொதுவான நியதி மனமாற்றம், தூய்மை, நம்பிக்கை, அன்பு, எதிர்நோக்கு என்பவையேகும்.

மனமாற்றம் பெற்ற வாழ்வே விண்ணகத்திற்கு நுழைவு சீட்டாக அமைகிறது. நற்செய்திப் பகுதியில் மகதலா மரியா, சக்கேயு, நல்ல கள்வன் இவர்கள் மனமாற்றத்தின் மாதிரிகள். அதிலும் நல்ல கள்வன் நேரிடையாக "இன்றே என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர்" (லூக் 23:43) என்று இயேசுவால் விண்ணக வீட்டுக்கு உரிமைப்பேற்றைப் பெற்றுக் கொள்கிறார்.

கள்ளங்கபடற்றசிறு பிள்ளைகளாக வாழ்வதிலும், (மத் 18:1-3) தம் உயிரை துச்சமாக நினைத்து இறைவனுக்காய் வாழ்தலிலும் (மத் 13:43) நம்பிக்கையில் நிலைத்திருத்தலிலும் (விண்ணரசின் பந்திக்குரியவராய் நூற்றுவர் தலைவன்) தாலந்துகளை பெருக்கிய விதத்திலும், இரக்கச் செயல்களால் விண்ணரசில் மட்டுமல்ல இறைவனின் இதயத்தில் இடம்பிடித்தவர்களும் நம் முன்னோடிகளாக விண்ணக தாய் வீட்டிற்கு தடம் பதித்து சென்றிருக்கின்றனர். அவர்கள் தடம் பற்றி நடந்தோமென்றால் "விண்ணகத்தாய் நாட்டை" அடையலாம்.

அதிலும் குறிப்பாக அவரைப் பின்பற்றி பணியாற்றிய சீடர்களிடம் "என் பொருட்டும் நற்செய்தியின் பொருட்டும் ... மறுமையில் நிலைவாழ்வையும் பெறாமல் போகார்" (மத் 10:30) என்று வாக்களித்துள்ளார் நம் தெய்வம். நமது பணி சீடத்துவ மதிப்பீடுகளின் படி தொடருமானால் விண்ணக தாய்வீட்டை அடையலாம்.

**இறுதியாக...**

நமது மரணம் எப்போது? எப்படி? யாருக்கும் தெரியாத ரகசியமாய் மறைத்து வைத்திருக்கிறார் நம் தெய்வம். மரணம் பற்றிய நினைவு நம்முள் நிலைத்திருந்தால் எல்லா கடினமான சூழல்களை புன்னகையுடன் கடக்க முடியும். பாவத்தை "தள்ளிப்போ" என்று தாண்டிப்போக முடியும். நமது பணியை "நான்வாழ்ந்தால் அது கிறிஸ்துவுக்காகவே இறந்தாலும் அது எனக்கு ஆதாயமே" (பிலி 1:21) என்ற தூய பவுல் அடியாரின் மனதை பிரதிபலித்து வாழ முடியும். ஒவ்வொரு நாளும் நம் கடவுளிடம் செல்லப் போகும் நாள் 'இன்றே' என்று தோன்றுமானால் எல்லோரையும் இயல்பாய் நேசிப்போம். துன்புறுத்துவோரையும் நேசிப்போம். மன்னிப்போம்.

நற்செயல்களால் நம்பணியினை அலங்கரிப்போம் "விண்ணகத்திலிருந்து ஒரு குரலைக் கேட்டேன். இது முதல் ஆண்டவரோடு இணைந்த நிலையில் இறப்போர் பேறு பெற்றோர் என எழுது ... அதற்கு தூய ஆவியார், ஆம், அவர்கள் தங்கள் உழைப்பிலிருந்து ஓய்வு பெறுவார்கள்; ஏனெனில், அவர்களின் செயல்கள் அவர்களைப் பின்தொடரும் என்று கூறினார்" (திவெ 14:13) என்ற இறைவார்த்தையை நினைவில் நிறுத்துவோம். "நமக்கோ விண்ணகமே தாய்நாடாக" கிடைக்க இறைவனை ஒவ்வொரு நாளும் உரிமையாய் வேண்டுவோம்.

நற்பணி **ஜெஸி. P.**

## நவம்பர் 2024 வட்டாரத் தியானக் கூட்டம்

| வ.எ | தேதி | வட்டாரம் | தொடர்பாளர் |
|---|---|---|---|
| 1. | 03 | புளியால்<br>9787491588 | நற்பணி S. சகாயராணி<br>9442254152 |
| 2. | 03 | சருகணி<br>9943632636 | செயலர்<br>9787967272 |
| 3. | 03 | தேவகோட்டை<br>9095866732 | நற்பணி L. ஆரோக்கியசாமி<br>9150579311 |
| 4. | 03 | ஆவுடைபொய்கை<br>8489703006 | நற்பணி J. ஆரோக்கியசாமி<br>82488 99247 |
| 5. | 16 | தங்கச்சிமடம்<br>9585998444 | நற்பணி M. மரிய கிரகோரி<br>94869 65799 |
| 6. | 16 | இராமேஸ்வரம்<br>9047998614 | நற்பணி M. விசுவாசம்<br>9442758641 |
| 7. | 16 | பாம்பன்<br>9790605049 | நற்பணி A. சத்தியேந்திரன்<br>6379405762 |
| 8. | 17 | மானாமதுரை<br>9944386477 | செயலர்<br>9787967272 |
| 9. | 17 | இராஜசிங்கமங்கலம்<br>9843752061 | நற்பணி A. சகாயராஜா<br>7010407853 |
| 10. | 24 | இடைக்காட்டூர்<br>9442857812 | செயலர்<br>9787967272 |
| 11. | 24 | சாயல்குடி<br>6383152402 | நற்பணி M. மரியகிரகோரி<br>9486965799 |

## 2024 ஆண்டுத் தியானம் — 2024

| | நாள் | இடம் | தியான வழிகாட்டி | நெறியாளர்கள் |
|---|---|---|---|---|
| 1. | 08,09 & 10 நவ. 2024 | அருள்சான்று நிலையம் பரமக்குடி | Fr. மைக்கேல் மகிழன் எம்மாவூஸ் மையம் | நற்பணி L. ஜோசப் இருதயம் நற்பணி S. இராஜேந்திரன் |

## நவம்பர் 2024 நற்செய்திப் பணிக்குழு பணித்திட்டம்

| நாள் | நிகழ்வு | இடம் |
|---|---|---|
| 02 | பரிந்துரை செபம் | திருஇருதய ஆண்டவர் திருத்தலம் இடைக்காட்டூர் |
| 03 | புதிய பணியாளர்கள் பயிற்சி | அருள்சான்று நிலையம். பரமக்குடி தந்தை ஜோசப் சேவியர் அரங்கம் காளையார்கோவில் |
| 03. | வட்டாரத் தியானக் கூட்டம் | புளியால். சருகணி. ஆவுடைபொய்கை தேவகோட்டை வட்டாரங்கள் |
| 06 | அருளமுது ஆதாரக்குழு கூடுகை | அமைதியகம். காயாவயல். அருள்சான்று நிலையம். பரமக்குடி |
| 8.9&10 | ஆண்டுத் தியானம் | அருள்சான்று நிலையம். பரமக்குடி |
| 09. | புதிய பணியாளர்கள் பயிற்சி | புனித குழந்தை தெரசாள் கோவில் தங்கச்சிமடம். |
| 10. | புதிய பணியாளர்கள் பயிற்சி | புனித செபமாலை அன்னை கோவில் இராமநாதபுரம். வியான்னி அருள்பணி மையம். சிவகங்கை, புனித அருளானந்தர் திருத்தலம். ஓரியூர் |
| 10. | தொடர்களப்பணி | சாயல்குடி பங்கு மேலமுந்தல் பங்கு |
| 16. | வட்டாரத் தியானக் கூட்டம் | இராமேஸ்வரம். தங்கச்சிமடம். பாம்பன் வட்டாரங்கள் |
| 17. | புதிய பணியாளர்கள் பயிற்சி | அமலஅன்னை அமைதியகம் காயாவயல். புனித ஆரோக்கிய அன்னை கோவில். சாயல்குடி |
| 17. | வட்டாரத் தியானக் கூட்டம் | மானாமதுரை. ஆர்.எஸ் மங்கலம் வட்டாரம் |
| 24. | வட்டாரத் தியானக் கூட்டம் | இடைக்காட்டூர் சாயல்குடி வட்டாரங்கள் |
| 24. | புதிய பணியாளர்கள் பயிற்சி | தூய ஆவியார் கோவில், இராஜசிங்கமங்கலம் |
| 24. | தொடர்களப்பணி | அஞ்சுக்கோட்டை. இருதயபுரம் பங்குகள். |
| 30&1/12 | வட்டாரக் கண்காணிப்பாளர்கள் தலையத்துப் பயிற்சி | பூண்டி மாதா திருத்தலம்.. பூண்டி |

| நாள் | மையம் | வழிநடத்துபவர்கள் |
|---|---|---|
| 03.11.24 | அருள்சான்று நிலையம் பரமக்குடி | நற்பணி A. சகாயராஜா<br>நற்பணி K. ஜஸ்டின்<br>நற்பணி A. அடைக்கலம் |
| 03.11.24 | தந்தை ஜோசப் சேவியர் அரங்கம், காளையார்கோவில் | நற்பணி A. சத்தியேந்திரன்<br>நற்பணி A. பிரான்சிஸ் சேவியர்<br>நற்பணி V. செங்கோல்மேரி |
| 09.11.24 | புனித குழந்தை தெரசாள் கோவில், தங்கச்சிமடம் | நற்பணி J. மேரிபுஷ்பம்<br>நற்பணி X. லூர்துமேரி<br>செயலர் |
| 10.11.24 | புனித செபமாலை அன்னை கோவில், இராமநாதபுரம் | நற்பணி J. மேரிபுஷ்பம்<br>நற்பணி பெ.தெரசா மிரண்டா<br>நற்பணி S. வில்லியம் |
| 10.11.24 | வியான்னி அருள்பணிமையம் சிவகங்கை | நற்பணி A. சகாயராஜா<br>நற்பணி A. யூஜின் அமல்ராஜ்<br>நற்பணி G. மிக்கேல் பிரபாகர் |
| 10.11.24 | புனித அருளானந்தர் திருத்தலம், ஓரியூர் | நற்பணி M. மரியகிரகோரி<br>நற்பணி S. அந்தோனி பிரகாஷ்<br>நற்பணி இரா. அருள்பிரகாசம் |
| 17.11.24 | அமலஅன்னை அமைதியகம் காயாவயல் | நற்பணி S. சகாயராணி<br>நற்பணி J. அருள் இளங்கோ<br>நற்பணி S. அமலோற்பவஆரோக்கியராணி |
| 17.11.24 | புனித ஆரோக்கிய அன்னை கோவில், சாயல்குடி | நற்பணி M. மரியகிரகோரி<br>நற்பணி M. அருள் மரியநாயகம்<br>நற்பணி A. சந்திர புஷ்பா |
| 24.11.24 | தூய ஆவியார் கோவில் இராசசிங்கமங்கலம் | நற்பணி S. மோட்ச அலங்காரம்<br>நற்பணி S. பால்ராஜ்<br>நற்பணி S. தைனஸ்மேரி |

**இப்ப இல்லாட்டி எப்ப ?**
-எல்லாரோ

**கல்லையும் கரைத்துவிடும்**
**கனிவான ஒரு வார்த்தை.**
**இரும்பையும் வளைத்துவிடும்**
**இனிமையான ஒரு வார்த்தை.**

**இதை நாம் உணர்வது இப்ப இல்லாட்டி எப்ப?**

கனிவான மறுமொழி கடுஞ்சினத்தையும் ஆற்றிவிடும்:
கடுஞ்சொல்லோ சினத்தை எழுப்பும். (நீதிமொழிகள் 15:1)

# அணிந்து கொள்வோம் படைக்கலன்களை

"அமைதியை அருளும் நற்செய்தியை அறிவிப்பதற்கான ஆயத்த நிலையை உங்கள் கால்களில் மிதியடிகளாகப் போட்டுக் கொள்ளுங்கள்" (எபே6:15)

நற்செய்தி அறிவிப்பதற்கான ஆயத்த நிலைகள் பற்றித் தொடர்ந்து தியானித்து வருகின்றோம். நல்லதொரு செயலைச் செய்வதற்கு முன் நாம் செய்யும் முன்னேற்பாடுகள் தான் வெற்றி மேடைக்கு ஏற்றி விடும் ஏணிப்படிகள். "உங்களுள் யாராவது ஒருவர் கோபுரம் கட்ட விரும்பினால் முதலில் உட்கார்ந்து அதை கட்டி முடிக்க ஆகும் செலவைக் கணித்து அதற்கான பொருள் வசதி தம்மிடம் இருக்கிறதா எனப் பார்க்க மாட்டாரா?".(லூக் 14:28) என்று ஆண்டவர் இயேசு உண்மையான நற்செய்திப் பணி செய்கிறவர் செய்ய வேண்டிய ஆயத்த நிலை பற்றிக் கூறியிருக்கிறார். (சீடத்துவ வாழ்வு) வாழ்வு தரும் நற்செய்தியை அறிவிக்கிறவர்கள் தங்களுக்குத் தாங்களே செய்து கொள்ள வேண்டிய தயாரிப்புகளைப் பொறுத்தே பணி வாழ்வின் சிறப்பு இருக்கின்றது.

கிறிஸ்து இயேசுவின் மனநிலையைக் கொண்டிருக்க வேண்டும் என்ற தலைப்பில் அவருடைய பரிவு பற்றியும் தாழ்நிலையில் உள்ளவர்களோடு அவர் கொண்டிருந்த உறவு பற்றியும் தியானித்திருக்கின்றோம். மூன்றாவதாக இயேசு ஆண்டவர் தந்தையோடு இணைந்திருக்கிறவராக இருந்தார். நம்மையும் அவ்வாறு இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றார். "நானே திராட்சைச்செடி நீங்கள் அதன் கொடிகள் ஒருவர் என்னுடனும் நான் அவருடனும் இணைந்து இருந்தால் அவர் மிகுந்த கனி தருவார். என்னை விட்டுப் பிரிந்து உங்களால் எதுவும் செய்ய இயலாது".(யோவா15:5) என்று கூறுகிறார். அவரை விட்டுப் பிரிந்திருப்போமானால் நம்மால் எந்தப் பணியும் செய்ய முடியாது. ஆண்டவர் இயேசு இதை மிக அழகாக "எதுவும் செய்ய முடியாது". என்ற சொல்லாடலைப் பயன்படுத்தி அவரோடு இணைந்திருக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்துகின்றார்.

நாம் எவ்வளவுதான் நல்ல காரியங்களைச் செய்தாலும் அவரோடு இணைந்து செய்யும்போது தான் அச்செயலுக்கு உயிர்ப்பு இருக்கின்றது. "நான் உங்களுக்குக் கூறியவற்றை நானாகக் கூறவில்லை என்னுள் இருந்து கொண்டு செயலாற்றுபவர் தந்தையே"(யோவா14:10). ஆண்டவர் இயேசு செய்த இறையரசுப் பணியைத் தந்தையோடு இணைந்துதான் செய்தார். அதைத்தான் என்னோடு இருந்து செயலாற்றுபவர் தந்தையே என்கிறார். "நான் தந்தையுள் இருக்கிறேன் தந்தை என்னுள் இருக்கிறார். நான் சொல்வதை நம்புங்கள்" என்கிறார் (யோவா 14:11).

இப்படி தந்தையோடு இணைந்திருப்பதற்கு அவர் செய்தது என்ன? தந்தையோடு தனித்திருந்தார் கருக்கலிலும், விடியற்காலையிலும், இரவெல்லாம் எப்பொழுதெல்லாம் நேரம் கிடைக்கின்றதோ அப்பொழுதெல்லாம் தனித்திருந்து தந்தையோடு செபிக்கிறவராக இருந்தார். இயேசுவுக்கே இறையரசுப்பணி செய்ய செப வாழ்வு. இறை ஒன்றிப்பு தேவைப்பட்டது. அப்படியானால் நமக்கு இன்னும் எவ்வளவு அதிகமாய் தேவை என்பது நமக்கெல்லாம் தெரியாதது அல்ல. செபத்தில் நிலைத்திருக்கும் போது தான் இறைவனோடுள்ள உறவில் ஒன்றிப்பில் நிலைத்து நிற்க முடியும். இப்படி இறைவனோடு இணைப்பிலிருந்து செய்யும் நற்செய்திப் பணி தான் குன்றின் மேல் விளக்கென பிறருக்கு ஒளிகொடுப்பதாய் இருக்கும். நம்முள் உலகத்தின் இருள் சூழ்ந்து விடாத படி நம்மைக் காத்துக் கொள்ள உதவுவது நமது செப வாழ்வு தான். அதுதான் இருளிலும் நம்மை ஒளிரச் செய்யும்.

நாம் பயன்படுத்தும் மொபைல் போனை அடிக்கடி மின் இணைப்பில் வைத்து சார்ஜ் ஏற்றிக் கொள்கிறோம். அப்பொழுதுதான் நாம் விரும்பியபடி நம் தேவைக்கேற்ப அதனைப் பயன்படுத்த முடியும். அப்படி நாமும் இறைவனோடு ஒன்றிப்பில் இருந்து சார்ஜ் ஏற்றிக் கொண்டால்தான் அவர் விரும்புகிற படி நம்மை அவரது கருவிகளாகப் பயன்படுத்திக் கொள்வார். விடுதலைப் பயணத்தில் இஸ்ரேல் மக்களை வழிநடத்திய

மோசே ஆண்டவரோடு சந்திப்புக்கூடாரத்தில் தனித்திருந்து இறைவனோடு ஒன்றிப்பில் இருந்து மக்களை வழி நடத்திச் செல்ல வல்லமையைப் பெற்றுக் கொண்டார்

அந்நிய தேசத்தில் அடிமையாகக் கொண்டு செல்லப்பட்ட தானியேல் தனக்கு கொடுக்கப்பட்ட பணியை செவ்வனே செய்வதற்கு இறைவனோடு உறவில் ஒன்றிப்பில் இருந்தார். தம் வழக்கப்படி நாள்தோறும் மூன்று வேளையும் தம் கடவுளுக்கு முன்பாக முழந்தாள் இருந்து மன்றாடி அவருக்கு நன்றி செலுத்துகிறவராக இருந்தார் (தானி6:10) இப்படி வழக்கமாக நாள்தோறும் மூன்று வேளையும் மன்றாடுகிறவராக இருந்ததால்தான் வேற்று தெய்வத்தை வழிபட்டு வந்த தாரியு அரசனை "என் ஆட்சிக்குட்பட்ட நாடு முழுவதும் உள்ள மக்கள் தானியேலின் கடவுளுக்கு அஞ்சி நடுங்க வேண்டும். இது என் ஆணை. ஏனெனில் அவரே வாழும் கடவுள் அவர் என்றென்றும் நிலைத்திருக்கிறார். அவரது ஆட்சி என்றும் அழிவற்றது. அவரது அரசுரிமைக்கு முடிவே இராது" என்று நற்செய்தி அறிவிக்கிறவராக மாற்றுகிறது. மூளை ஜெயிக்க முடியாததை முழங்கால் ஜெயிக்கும் என்று சொல்வார்கள். முழங்கால் என்பது செபத்தின் அடையாளம். உண்மையான நற்செய்திப் பணி செய்ய விரும்புகின்றவர்கள் இறைஉறவிலும் ஒன்றிப்பிலும் இருக்க வேண்டும். "நாங்களோ இறைவேண்டலிலும் இறைவார்த்தைப் பணியிலும் உறுதியாய் நிலைத்திருப்போம்"(திப 6:4) என்று இறைவாவார்த்தைப் பணி செய்வதற்கு இறைவேண்டல்தான் ஆயத்த நிலை என்பதைத் திருத்தூதர்களும் அறிந்திருந்தனர். எனவே இறைவன் விரும்புகின்ற வகையில் இறையரசுப் பணி செய்ய இயேசு ஆண்டவர் எப்படி தந்தையோடு ஒன்றிப்பில் இருந்தாரோ அது போல நாமும் இருந்து ஆயத்தமாவோம்.

நற்பணி **ச.சகாயராணி,** இராம்நகர்.

## நற்செய்தி அறிவிப்பு

இயேசு சீடர்களை நோக்கி, "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்" மாற்கு (16:15).

இதில் படைப்பிற்கெல்லாம் நற்செய்தி என்று கூறியிருப்பதிலிருந்து நற்செய்தி என்பது மனிதருக்கு மட்டுமல்ல என்பது உறுதியாகிறது. அவ்வாறெனில் மற்ற உயிரினங்களுக்கு அறிவிக்க எந்த மொழியை பயன்படுத்துவது? என்ற கேள்வி எழுகின்றது. அந்த மொழியே அன்பின் மொழி.

"என் அன்பான சகோதரிப் பறவைகளே. கடவுள் உங்களைப் படைத்தார். உங்களுக்கு மாபெரும் பொறுப்புகள் கொடுத்தார். அவர் உங்களுக்கு பறக்கத் திறன் கொடுத்தார். நீங்கள் வானில் சுதந்திரமாகப் பறக்கலாம். நீங்கள் தேவைப்படும் எந்தவிதமான உண்ணும் பொருளையும் அவர் உங்களுக்கு அளிக்கிறார். நீங்களே தானாகவே எதையும் விதைக்கவோ அறுக்கவோ வேண்டியதில்லை. கடவுள் உங்களுக்கு அனைத்தையும் வழங்குகிறார். நீங்கள கடவுளை மிகவும் பெருமையுடன் புகழ வேண்டும்"

இது புனித பிரான்சிஸ் அசிசியாரின் புகழ்பெற்ற பறவைகளுக்கான நற்செய்தி அறிவிப்பாகும். அவரைப் போன்றே மனிதரையும் தாண்டி நற்செய்தி அறிவித்தவர்கள் பலர். புனிதர்கள் பதுவை அந்தோணியார், ஜெர்ட்ரூட், நிவெல்லஸ், கொலும்பா, கில்ஸ், ஹக் ஆப் லிங்கன் போன்றோர். அத்தகைகையோரில் சிலர். நாம் அவர்களைப் போல் அறிவிக்க முயற்சி செய்வோம்.

நற்செய்தி அறிவித்தல் கீழ்க்கண்ட நிலைகளில் நடைபெறலாம்.

**1. தனிநபருக்கு அறிவித்தல் :** வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் நம்மிடம் உரையாடும் நபர்களிடம் இயேசுவைப் பற்றியும். இறையாட்சியைப் பற்றியும் எடுத்துக் கூறலாம். அது நண்பர்கள். குடும்பத்தினர். உடன் பணி செய்பவர்கள். நாம் சந்திக்கும் நபர்கள். உதாரணமாக இயேசு நிக்கதேமை சந்தித்தார். பிலிப்பு எத்தியோப்பிய நிதியமைச்சருடன் உரையாடியது.

**2. குழுக்களுக்கு அறிவித்தல் :** குழுவாக கூடியிருக்கும் இடங்களில் நற்செய்தியை அறிவித்தல் இதன் மூலம் ஒரே நேரத்தில் பலருக்கு நம்மால் நற்செய்தியை அறிவிக்க முடியும். புத்துயிர் செபம். வட்டாரக் கூட்டங்கள். விழாக்கள். மறைக்கல்வி. நற்செய்தி கூட்டங்கள் விடுமுறை நாள் விவிலிய வகுப்புகள் ஆகிய இடங்களில் அறிவிக்கலாம். உதாரணமாக பெந்தக்கோஸ்து நாளில் பேதுருவின் அருளுரை.

**3. பிற இடங்களுக்கு சென்று அறிவித்தல் :** இயேசுவைப் பற்றி தெரியாதவர்களுக்கு நற்செய்தியை அறிவித்தல். மக்களின் அடிப்படைத் தேவையை நிறைவு செய்து அவர்களின் ஆன்மீகத் தேவைக்கு இயேசுவை அறிவித்தல் உதாரணமாக திருத்தூதர்கள் புனித சவேரியார். புனித அருளானந்தர். இறை ஊழியர் லெவே. தந்தை அந்தோணி கிரிமினாலி போன்றோர்.

**4. திட்டமிட்டு அறிவிப்பது :** குறிப்பிட்ட நாள்களில் மக்களை ஒன்று கூட்டி அறிவிப்பது அல்லது குறிப்பிட்ட காலங்களில் மக்களை தேடிச் சென்று அறிவிப்பது. உதாரணமாக இயேசு 72 சீடர்களை நற்செய்தி அறிவிக்க அனுப்புவது. நற்செய்தி பணியாளர்கள் தவக்கால களப்பணி ஆற்றுதல்.

**5. எழுத்தின் மூலம் அறிவிப்பு :** நற்செய்தியை அறிவிக்க விவிலியம் இல்லாத இடங்களில் விவிலியம் இலவசமாக கொடுப்பது. இயேசுவைப் பற்றி வாரப்பத்திரிக்கை மாத பத்திரிக்கைகளில் எழுதுவது. புத்தகங்களை வாங்கி அனைவருக்கும் கொடுப்பது போன்ற செயல்களின் மூலமும் அறிவிப்பது. உதாரணமாக புனித பவுல் எழுதிய கடிதங்கள். நற்செய்தி பணியாளர்களின் விவிலிய வங்கி. பணியாளர் மாத இதழ் போன்றவை.

**6. ஊடக வாயிலாக அறிவிப்பு :** தொலைக்காட்சி. வானொலி. இணைய தளத்தை பயன்படுத்தி நற்செய்தியை அறிவிப்பது. தற்போதுள்ள காலகட்டத்தில் சமூக ஊடகங்கள் மூலம் நற்செய்தியை அறிவப்பதால் உலகமெல்லாம் விரைவில் சென்று சேருகிறது. உதாரணமாக மாதா தொலைக்காட்சி.

**7. சமூக சேவையின் மூலம் அறிவிப்பு :** மக்களுக்கு தேவையான தவிர்க்க முடியாத தொண்டுகளை அவர்களுக்கு செய்து அவர்கள் ஏற்றுக் கொண்ட பிறகு நற்செய்தியை அறிவித்தல் உதாரணமாக கொரிந்து நகரில் பவுல் ஆற்றியது. அன்னை தெரேசா ஆற்றிய சமூகத் தொண்டு.

**8. வாழ்க்கையின் மூலம் நற்செய்தி :** ஒருவர் சமூகத்தில் வாழும்போது ஒருவருடைய பண்புகள். நற்குணங்கள். தூய்மையான வாழ்க்கை மூலம் சான்றுடன் வாழ்தல்.

**9. ஒரு குழுவை மையமாக கொண்ட அறிவிப்பு :** ஒரு குழுவைச் சேர்ந்தவர்களிடையே நல்ல உறவை ஏற்படுத்திக் கொண்டு அவர்களின் தேவையை அறிந்து உதவி செய்து நற்செய்தியை அறிவித்தல் உதாரணமாக அம்புரோஸ் அறநெறி அமைப்பு.

இயேசுவை அறிவிக்க இன்னும் பல வழிகள் உள்ளன. ஏதாவது ஒரு வகையில் நற்செய்தியை அறிவிப்பவர்களாக மாறுவோம்.

நற்பணி **ஜஸ்டின்**




ஒரு மனிதனுக்கு உழைப்பு எந்த அளவுக்கு முக்கியமோ அந்த அளவுக்கு அவனுடைய ஓய்வு நேரமும் முக்கியம். உழைக்கும் நேரம் ஒருவனின் வெற்றியை உறுதிசெய்வது போல அவனுடைய ஓய்வு நேரமும் அவனுடைய வெற்றியை உறுதிசெய்யும். மனித வரலாற்றை பின்னோக்கி பார்த்தால் பெரிய பெரிய கண்டுபிடிப்புகளும் சரி, பெரிய பெரிய ஆபத்தான, கொடூரமான செயல்பாடுகளும் சரி எல்லாம் ஓய்வு நேரத்தை பயன்படுத்திய விதத்தில்தான் இருந்தது. தனிப்பட்ட மனிதனின் தனிபட்ட ஓய்வு நேரத்தை தனிப்பட்ட வகையில் சரியாக பயன்படுத்துவதில் தான் அந்த தனிபட்ட மனிதனின் வெற்றியும் அமைகிறது.

இந்த மாதம் உள் உந்துதலில் வளர 10 வழிமுறைகள் என்ற வரிசையில் 'சரியான, நேர்மறையான வகையில் ஓய்வெடுக்க கற்றுக்கொள்ளுங்கள்' என்ற செயல்பாட்டை பற்றி பார்ப்போம். இந்த பகுதியில்

1. உடல் சார்ந்த தளர்வு உத்திகள் (Physical Relaxation Techniques)
2. மனம் சார்ந்த தளர்வு உத்திகள் (Mental Relaxation Techniques)
3. உணர்வு சார்ந்த தளர்வு உத்திகள் (Sensory Relaxation Techniques)
4 உணர்ச்சி சார்ந்த தளர்வு உத்திகள் (Emotional Relaxation Techniques)
5 அனுதின பழக்கங்கள் (Daily Habits) ஆகியன பற்றி பார்ப்போம்.

1. **உடல் சார்ந்த தளர்வு உத்திகள்** (Physical Relaxation Techniques)

**ஆழமான சுவாசம்** (Deep Breathing)

நமது உணர்வுகளை கவனத்தில் வைத்து மெதுவான ஆழமான சுவாசத்தை பயிற்சி செய்தல் வேண்டும்

**தசைச் தளர்வு** (Progressive Muscle Relaxation)

தசைகளை இருக்கமாக வைத்து பின் இலகுவாக்கும் பயிற்சியை செய்ய வேண்டும்.

**யோகா** (Yoga)

மெதுவான உடல் பயிற்சிகள், எளிய ஆசனங்கள் செய்வது நல்லது.

**உடல் தசை தளர்வு** (Massage)

சோர்வு, வலி உள்ள பகுதிகளில் கைகள் கொண்டு தசை தளர்வு செய்வது நல்லது.

**நடை / உடற்பயிற்சிகள்** (Walking / exercises)

மெதுவான உடற்பயிற்சிகள் நடைபயிற்சிகள் செய்வது உடல் சார்ந்த இறுக்கத்தை போக்க உதவியாக இருக்கும்.

2. **மனம் சார்ந்த தளர்வு உத்திகள்** (Mental Relaxation Techniques)

**விழிப்புணர்வு தியானம்** (Mindfulness Meditation)

நிகழ்காலத்தில் கவனம் செலுத்தி தியானிக்கும் இந்த வகை பயிற்சி தினமும் செய்வது நல்வது.

**காட்சிப்படுத்துதல்** (Visualization)

நமக்கு பிடித்த அமைதியான இடத்தை காட்சி படுத்தி மனதை அமைதி நிலைக்கு கொண்டு வரலாம்.

**நேர்மறையான சுய பேச்சு** (Positive Self-Talk) : உங்களை நீங்களே நேர்மறையான கூற்றின் மூலம் உற்சாகப்படுத்திக் கொள்ளுங்கள்

**எழுதுங்கள்** (Journaling): உங்கள் சிந்தனைகளை, உணர்வுகளை எழுதிப் பழகுங்கள்.

**வாசித்து பழகுங்கள்** (Reading): மனதிற்கு இதமான உற்சாகம் தரும் புத்தகங்களை வாசியுங்கள்

3. **உணர்வு சார்ந்த தளர்வு உத்திகள்** (Sensory Relaxation Techniques)

**இதமான இசையை கேளுங்கள்** (Listen to calming music / sounds)

**இதமான நறுமணத்தை நுகருங்கள்** (Aromatherapy)

**ரம்மியமான வெளிச்சத்தை அமையுங்கள்** (Create Dim Lighting)

**குளியல் தியானம்** (Relaxing water temperature)

**இயற்கை** (Spend time with nature)

4 **உணர்ச்சி சார்ந்த தளர்வு உத்திகள்** (Emotional Relaxation Techniques)

**நன்றியுணர்வு பயிற்சி** (Gratitude Practice)

நல்ல நேர்மறையான அனுபவங்களை அசைபோட்டு பாருங்கள்.

**மன்னிப்பு** (Forgiveness)

நேர்மறையான அனுபவங்கள் அல்லாத மற்ற கசப்பான அனுபவங்கள் உணர்வுகள் நம்மை விட்டு அகன்று போகட்டும்

**தன் அக்கறை** (Self Compassion)

நம்மை நாம் மன்னித்து அரவணைத்து கொள்வோம்.

**நகைச்சுவை** (Laughter)

நகைச்சுவை தரும் விசயங்களை படிப்போம், பார்ப்போம்

**சமூக உறுதுணை** (Social Support)

அன்புக்குரியவர்களிடம் தொடர்பாய் இருங்கள்.

5 **அனுதின பழக்கங்கள்** (Daily Habits)

**தியானம் - நேரத்தை அமைத்தல்** (Schedule relaxation time)

**தூக்கத்திற்கு முன்னுரிமை** (Prioritize Sleep)

**ஆரோக்கியமான உணவு பழக்கம்.** (Healthy eating habit)

**தொடர் உடற் பயிற்சிகள்** (Regular Exercise)

**தகவல் தொடர்வு சாதனங்களை அளவோடு பயன்படுத்துதல்** (Limit Screen time)

**அசைபோட அரை நிமிடம்:**

"ஓய்வெடுக்க தெரிந்தவன், வாழத் தெரிந்தவன்"

சகோ. **S.ஜான் ஜோ பிரபாகர். SHJ.**

மனநல ஆற்றுபடுத்துநர், பரமக்குடி.

## என்னை மன்னியும்

- உங்கள் அன்பு கள்ளமற்றதாய் இருப்பதாக என்ற இறைவார்த்தைக்கு முரணாக சுயநலத்தோடு பிறரிடம் உறவு கொண்டு வாழ்ந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன் இறைவா! என்னை மன்னியும் (உரோ 12:9)
- பிறர் உங்களைவிட மதிப்புக்கு உரியவரென எண்ணுங்கள் என்ற அறிவுரையை மறந்து பிறரின் சாதி, செல்வம் ஆகியவற்றை வைத்து அவர்களை தாழ்ந்தவர்களாகக் கருதி வாழ்ந்த குற்றத்திற்காக இறைவா! என்னை மன்னியும் (உரோ 12:10)
- வறுமையுற்ற இறைமக்களோடு உங்களிடமுள்ளதைப் பகிர்ந்து கொள்ளுங்கள் என்பதை மறந்து தேவையில் உள்ளோரைக் கண்டு கொள்ளாமல் வாழ்ந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன் இறைவா! என்னை மன்னியும் (உரோ 12:13).

நற்பணி S.P. **சவரிமுத்து**, இராம்நகர்

## செப வீரர்களுக்கு

| இம்மாத செபக் கருத்து | |
|---|---|
| | • குழந்தைகளை இழந்து கைவிடப்பட்ட நிலையில் வாழும் பெற்றோர்களுக்காக<br>• போர் மற்றும் இயற்கை பேரிடரில் இறந்தவர்களின் குடும்பங்கள் ஆறுதலும், பாராமரிப்பையையும் பெற்றிட<br>• உலகில் குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளில் போர் அபாயம் நீங்கி நீடித்த அமைதி நிலவ.<br>• இந்தியாவில் மதச்சார்பின்னையும், சனநாயக மதிப்பீடுகளும், அமைப்புகளும் பாதுகாக்கப்பட<br>• நல்ல மழைபெய்து விவசாயம் செழிக்க<br>• விண்ணகப் பிறப்படைந்த நற்செய்திப் பணியாளர்கடு ஆன்மாக்கள் இறைவனில் நிலையான அமைதியைப் பெற. |

**விரும்பத்தக்க செயல்பாடு:**

- இறந்த ஆன்மாக்களை நினைத்து உணவில் சிறு தியாகங்கள் செய்து வறுமையில் வாடும் மாற்றுத் திறனாளிக்கு உதவுதல்
- விவசாயிகளுக்காக தினமும் செபித்தல்.



அருளமுது ஆதாரக்குழுக் கூடுகை - அருள்சான்று நிலையம்



அருளமுது ஆதாரக்குழுக் கூடுகை - அமைதியகம்



புதிய பணியாளர்கள் பயிற்சி
காளையார்கோவில்




புதிய பணியாளர்கள் பயிற்சி
இராமநாதபுரம்

## படங்களைக் கொண்டு இறைவார்த்தையை கண்டுபிடியுங்கள்?

படங்களைக் கொண்டு நினைவுக்கு வரும் இறைவார்த்தையை சட்டென்று சொல்லுங்கள் பார்ப்போம்.

துப்பு வேண்டுமா? **திருப்பாடல்கள் 28-30 அதிகாரங்களுக்குள்**








அக ஆய்வு - இடைக்காட்டூர்



களப்பணி திறனாய்வு- மரியின் ஊழியர்கள் நவதுறவியர்கள்
அருள்சான்று நிலையம்



வட்டாரத் தியானக் கூட்டம்
இராம்நகர்



வட்டாரத் தியானக் கூட்டம்
சி.கே. மங்களம்



புதிய பணியாளர்கள் பயிற்சி
அமைதியகம்



வட்டாரத் தியானக் கூட்டம்
செஞ்சை

**Narseithi Paniyalar** (தனிச்சுற்றுக்கு மட்டும்)
is published on behalf of the Commission for Proclamation, Diocese of Sivagangai from Arulchandru Nilayam (Faith Resource Development Centre), Brothers of the Sacred Heart, Ulaganathapuram, Vendhoni (B.P.O.) Paramakudi - 623 701, Ramnad Dist. Tel : 04564- 230453.
www.arulchandrunilayam.org |Email: arulchandrupmk@gmail.com